விலை ரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 புரட்டாதி 4 ஜுலகஜ் 2 இதழ் 219

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 20—9—82

★ பாஸ்போட் படங்கள்
★ அடையாளஅட்டைப் படங்கள்
★ திருமண விழாவா!!
★ விசேஷ நிகழ்ச்சிகளா!!
எதுவாயினும் மிகவிரைவில்
உங்கள் புகைப்படங்களை
செய்து தருகிறார்கள்...
★ கவிதாலயா ★
கலர் போட்டோ
[வெலிங்டன் சந்தியிலிருந்து
10 யார் தூரத்தில்] 4561

புகைப்படத்துறையில்
ஓர் புதிய மாற்றம்
உங்கள் கலர்ப்படங்களை
யாழ். நகரிலேயே டெவலப்பண்ணி
பிறின்ற் பண்ணித் தருகிறார்கள்...
★ கவிதாலயா ★
கலர் போட்டோ
37 [351], 1ம் மாடி,
மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
[வெலிங்டன் சந்தி அருகாமையில்]
4562

# ஜனாதிபதி தேர்தல் பங்குபற்றுவதும் இல்லை வாக்களிப்பதும் இல்லை!

## பகீதரதனுக்கு 10நாள் விளக்கமறியல்

சென்னை, செப் 19

சென்னை சிதம்பரம் சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்றுவரும் இலங்கை – இந்

[8ம் பக்கம் பார்க்க]

## தமிழர் விடுதலைக் கூட்டணி பொதுச்சபை தீர்மானம்

[ஏ. வி. மாணிக்கம்]

**ஜனாதிபதித் தேர்தலில் பங்குபற்றுவதில்லை என்றும், வாக்களிப்பதில்லை என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபை தீர்மானித்துள்ளது.**

தமிழர் விடுதலைக் கூட்டணி பொதுச்சபைக் கூட்டம் நல்லூர் எம். பி. யும், தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவருமான திரு. எம்.சிவசிதம்பரம் தலைமையில் அவரது அலுவலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம் உட்பட எம். பி.க்கள் திரு. வெ. யோகேஸ்வரன், திரு. ஆ மு. ஆலாலசுந்தரம், திரு. வி. ஆனந்தசங்கரி, திரு. வி. தர்மலிங்கம். திரு. ஆர். ரி, சம்பந்தன் ஆகியோரும், மற்றும் திரு. எஸ். சி. சந்திரகாசன், கவிஞர் காசி ஆனந்தன் உட்பட இளைஞர்பேரவை, மகளிர் பேரவைகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் சமுகமளித்திருந்தனர்.

பூட்டப்பட்ட அறையினுள் சுமார் ஆறு மணித்தியாலங்களாக பொதுச்சபையினர் ஜனாதிபதி தேர்தல்நிலைமைகுறித்து ஆராய்ந்தனர்.

### 5பேர் கொண்ட குழு

இது சம்பந்தமாக அறிக்கை தயாரித்து வெளியிட திரு. அ. அமிர்தலிங்கம், திரு. எம்.சிவசிதம்பரம், திரு.ஆ.மு ஆலாலசுந்தரம், திரு. ஆர். ரி. சம்பந்தன், திரு எஸ். சி. சந்திரகாசன் ஆகியோரைக்கொண்ட குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

(8–ம் பக்கம் பார்க்க)

## சிமெந்து தொழிற்சாலை 3-ம் கட்டப்பிரிவில் ஏற்பட்ட தீ விபத்து!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை 3ம் கட்டப்பிரிவில் நேற்றுமுன்தினம் இரவு தீவிபத்து ஏற்பட்டு, நீண்ட நேரத்தின் பின்னர் தீ அணைக்கப்பட்டது

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை 3ம் கட்டப்பிரிவில் தற்போது புதிதாக அமைக்கப்பட்டுவரும் நிலக்கரி

[8ம் பக்கம் பார்க்க]

## 'தமிழீழக்கோரிக்கையைஏற்று எனக்கு வாக்களியுங்கள்'

### முதல் பிரசாரக் கூட்டத்தில் குமார்

[யாழ்ப்பாணம்]

"தமிழ் தேசிய இனம் சுதந்திரமாக, தனக்கென ஒரு தாயகமான தமிழ் ஈழத்தில் வாழவேண்டுமென்பதற்காகவே ஜனாதிபதி தேர்தலில் நான் போட்டியிடுகின்றேன்"

இவ்வாறு, தமிழ் காங்கிரசின் பொதுச் செயலாளரும் ஜனாதிபதி தேர்தலில் அபேட்சகராகப் போட்டியிடுபவருமான திரு. குமார் பொன்னம்பலம், நேற்றிரவு யாழ். திறந்தவெளியரங்கில் நடைபெற்ற முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் தெரிவித்துள்ளார்.

திரு. குமார் பொன்னம்பலத்தின் கருத்தை அறிவதற்காக கொட்டுமழையிலும் திறந்தவெளியரங்கில் உள்ளும் வெளியிலும் ஏராளமானோர் குழுமிநின்றனர்.

### குமாருக்கு வரவேற்பு

நேற்றுப் பிற்பகல் 2மணிக்கு யாழ். புகையிரத நிலையத்தில் வந்திறங்கிய திரு குமார் பொன்னம்பலத்துக்கு சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது. புகையிரத நிலையத்தில் வரவேற்கவந்துநின்ற ஆதரவாளர்கள் திரு. குமார்பொன்னம்பலத்தை மாலைசூட்டி வரவேற்று, கார் பவனியாக அழைத்துச் சென்றனர்.

2மணிக்கு ஆரம்பமான ஊர்வலம் யாழ்நகரின் முக்கிய வீதிகள் வழியாக சுற்றிவந்து 4மணிக்கு காங்கிரஸ் கட்சிக் காரியாலயத்தை அடைந்தது. சந்திகள் தோறும் மக்கள் திரண்டுநின்று வரவேற்றனர்.

ஊர்வலத்தின்போது தமிழீழக் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

(8ம் பக்கம் பார்க்க)

## 'அமிர்' லிபியா செல்கிறார்

(யாழ்ப்பாணம்)

எதிர்க்கட்சி முதல்வர் திரு. அ. அமிர்தலிங்கம், இம்மாதம் 26ம் திகதி லிபியாவுக்குசெல்லவுள்ளார்.

தனிப்பட்ட விஜயம்ஒன்றை மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சி முதல்வருடன் அவரது பாரியாரும் செல்கிறார். (மா)

## ரூ.42,000 கள்ளநோட்டுக்கள் காத்தான்குடியில் சிக்கின!

(நமது நிருபர்கள் இரா. உதயகுமார், இரா. துரைரத்தினம்)

காத்தான்குடியில் 42,000 ரூபா கள்ள நோட்டுக்கள் கைப்பற்றப்பட்டுள் ளன.

இவை முழுவதும் புத்தம் புதிய நூறுரூபா நோட்டுக்களாகவிருந்தன.

இந்த நோட்டுக்களில் 26–3–1979 என்று திகதியிடப்பட்டுள்ளதென்றும் இவற்றில் Z/2 513278 முதல் பல இலக்கங்கள் இடம் பெற்றுள்ளன என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

குளியாப்பிட்டியிலிருந்து வந்த அமுனுல்லா என்பவர் காத்தான்குடியைச் சேர்ந்த அரிசி ஆலை உரிமையாளர் ஷேகு முகமட் ஷாகுல் ஹமீட்டிடம் இப்பணத்தைச் செலுத்தியதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

(8–ம் பக்கம் பார்க்க)

யாழ். நகரில் நவீனவசதிகள் கூடியது
ஹோட்டல் றெலெக்ஸ்
தேன்சிந்தும் ஐஸ்கிறீம், பொம்பே சுவீற்ஸ்
வகைகளுக்கும் சுவைமிக்க கோழிப்புரியாணி
வகைகளுக்கும் யாழ்.நகரில் சிறந்து விளங்கும்
ஸ்தாபனம்
HOTEL ROLEX
340, ஆஸ்பத்திரி வீதி – யாழ்ப்பாணம்
4559

சிறந்த வகுப்புக்கள்
★ Computer Programming
(Basic–Cobal–Fortran–R.P G.II–ஆகிய முறைகள்)
★ SPOKEN ENGLISH
★ ஹோட்டல் மனேஜ்மென்ற் ★ றெலெக்ஸ்
வகுப்புக்கள் ஆரம்பம் 29-09-82
G.C E.(O/L)படித்த இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்
விபரங்கள் நேரில் அல்லது விண்ணப்பிக்க்வும்.
The School of Computer Studies
52/1, கனகரத்தினம் பில்டிங் மேல்மாடி),
ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். 4587

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

மூன்றும் குறுக்குத் தெரு, பிரதான வீதி சந்தியில் மக்கள் வங்கி முன்னுல் சகல வசதிகளுடன் மாடி வீடு விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 91, 3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 4580

மொறிஸ்மைனர் 1000 தொடர் 4 ஸ்ரீ 9336 கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: "சாந்தாவாசா", வேம்படி, கிழக்குத்தெரு, வல்வெட்டித்துறை. 4548

புனரமைக்கப்பெற்ற C. 90, C. 50, C. 70 மோட்டார் சைக்கிள்களும் DELICA வான்களும் விற்பனைக்குண்டு. மற்றும் எந்தவிதமான வாகனங்களும் குறைந்த விலையில் ஆட்களுக்கு நேரடியாகத் தருவித்துக் கொடுப்போம். நா. சாம்பசிவம் அன் கோ. 54 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். 4563

யாழ்ப்பாணம் நம் 64 கஸ்தூரியார் வீதியில் கேந்திரஸ்தானத்தில் அமைந்துள்ள கடை ஒன்று உடன் விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 4574 மே/பா "ஈழநாடு" லிமிட் யாழ்ப்பாணம். 4574

Ford Prefect 2 ஸ்ரீ தொடர் இலக்க கார் விற்பனைக்குண்டு. [டாக்டரின் சொந்தப்பாவிப்பிலுள்ளது] தொடர்பு: 50, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 4560

'அவெரி' (Avery) மேடைத் தராசு விற்பனைக்குண்டு. பார்வையிடவும், விலை விபரங்களுக்கும் தொடர்பு கொள்க; மனேஜர் பவர் அன் கொம்பனி 5, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 4564

## வைத்தியம்

நாட்பட்ட மனநோய், வலி, அல்சர், முதலியவற்ருல் அவஸ்தைப்படுகிறீர்களா? உத்தரவாதத்துடன் சிகிச்சை அளிக்கப்படும். நேரில் அல்லதுகடித மூலம் தொடர்புகொள்ளவும். டாக்டர் V. T. சந்திரன், 218/5, பலாலி வீதி. கந்தர்மடம், யாழ்ப்பாணம். 4401

## வகுப்புகள்

தட்டச்சு, சுருக்கெழுத்து வகுப்புகள் ஆரம்பம் 20-9-82, ஐலண்ட் இன்ஸ்ரியூட், (விகாரை சந்திரில்), 58, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (4531)

Scientific cutting, Hair-Style and Beauty Treatment, Cake Making, Icing and Decoration ஆகியவற்றிற்கு வகுப்புக்கள் நடைபெறுகின்றன. வகுப்புக்களில் சேரவிரும்புவோர் ஞாயிற்றுக்கிழமைகளில் (10-3) மணிக்குமிடையில் தொடர்பு கொள்ளவும். குறுகியகால வகுப்புகளுமுண்டு. The Ladies Academy, வேம்படி மகளிர் கல்லூரிக்கு முன்பாக, 4, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். 4249.

**வியாபாரம் பெருக**
**விளம்பரம் செய்க**

## கல்வி

மூன்றே மாத காலத்தில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க தபால் மூலம் கற்று தரப்படும். விபரங்கட்கு தொடர்பு கொள்க: Brilliant Institute P. O. Box 1898, Colombo. 4583

## தேவை

நவீன முறையில் றெடிமேட் ஆடைகள் பீஸ் சலார் அடிப்படையில் தைக்கக்கூடிய ஆண் பெண் ரெயிலேர்ஸ் உடன் தேவை. நேரே வரவும். காமதேனு, 25, நவீன சந்தை, கஸ்தூரியார் வீதிப்பக்கம், யாழ்ப்பாணம். 4579

அகில உலக பேனு நண்பர் தொடர்புகளுக்குவிபரம் அறிய சுயவிலாசமிட்ட தபால் உறையுடன் தொடர்பு கொள்க: Penpals Centre, P. O. Box 1898, Colombo. 4584

யாழ்ப்பாணம், இசை மன்றத்திற்கு வாரநாட்களில் மட்டும் வயலின், வாய்ப்பாட்டு கற்பிக்க தராதரம் பெற்ற ஆசிரியை உடன்தேவை. கடித மூலம் தொடர்பு கொள்க. விளம்பரஇல; 4582, C/O, ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 4582

நவநாகரீக ஆடைகள் தைக்கும் நிலையத்திற்கு [பெண்கள், சிறுவர்] கட்டிங் வெட்டுவதில் அனுபவமுள்ள பெண்கள் தேவை. முகவரி சிவாஸ் இன்டஸ்றீஸ், 1003, திருநகர்-கிளிநொச்சி. 45.6

"கதிரைகளுக்கு குசன் (Cushion) தைக்கக் கூடியவர்கள் தேவை. தொடர்ச்சியான வேலை உண்டு. அனுபவமுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 4554, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 4554

தரமான தமிழ் தட்டச்சு யந்திரம் உடன் தேவை சகல விபரங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்: முகாமையாளர் 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 4575

---

ஐ. தே. க. அமைப்பாளர் சிபார்சில்

# வவனியாவில் 12 பேருக்கு விசேட சேவை அதிகாரி பதவிகள்!

(வவனியா)

ஐக்கியதேசியக்கட்சி அமைப்பாளரின் சிபார்சில் 12 பேருக்கு விசேட சேவை அதிகாரிகள் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

வவனியா மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சி அமைப்பாளர் திரு. கே. ரி புலேந்திரன் சிபார்சில் இந்த நியமனம் வழங்கப்படுள்ளதாகத் தெரிகின்றது.

கடந்த புதன்கிழமை வவனியா கச்சேரியில் வைத்து உத்தியோகபூர்வமாக கடமைகள் இவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதே வேளை அண்மையில் வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரத்தின் சிபார்சில் 12 பேருக்கு விசேட சேவை அதிகாரிகள் நியமனமும் வழங்கப்பட்டது.

வவனியா மாவட்டத்தில் உள்ள 24 கிராமசேவையாளர் பிரிவுக்கும் தனித்தனி விசேட சேவை அதிகாரிகள் கடமையாற்றவுள்ளனர். ஆனுல் இதுவரை காலமும் இரு கிராமசேவையாளர் பிரிவுக்கு ஒரு விசேட சேவை அதிகாரி கடமையாற்றினுர் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

## 3 ம் தவணை ஆரம்பம்.

[வவனியா]

தமிழ் சிங்கள பாடசாலைகள் அனைத்தும் 3ம் தவணைக்காக இன்று திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதே வேளையில் ஜனுதிபதி தேர்தலுக்கு பாடசாலைகள் அனைத்தும் அடுத்தமாதம் 18ம் 19ம், 20ம், திகதிகளில் மூடப்பட விருப்பதாக தெரிகின்றது.

---

சாவகச்சேரி
நகராட்சி மன்றம்

## ஆதனவரி அறிவித்தல்

1982-ம் ஆண்டு 3-ம் கந்தாயத்துக்குரிய ஆதன வரியை 30-09-82ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-30 மணிக்கு முன்பு இக் காரியாலயத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். தவறின் இத் திகதிக்குப் பின்பு செலுத்தப்படும்வரியுடன், வசிப்பிட வளவுகளுக்கும், வெற்றுக் காணிகளுக்கும் பதினைந்து வீதமும் (15%) ஏனைய ஆதனங்களுக்கு இருபது வீதமும் (20%) கூடுதலாகச் சேர்த்து அறவிடப்படுமென்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

1982-ம் ஆண்டு 4-ம் கந்தாயத்துக்குரிய ஆதன வரிகளை 31-10-82ந் திகதிக்கு முன் செலுத்துவோர்களுக்குசெலுத்தப்படவேண்டிய வரித்தொகையில் 5% கழிவு வழங்கப்படும்.

த. நவரத்தினராசா,
செயலாளர்,
நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.

நகராட்சிமன்ற அலுவலகம்,
சாவகச்சேரி.
17-9-1982. 4573

---

## மல்லாகம் மாவட்ட நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

வழக்கு இலக்கம் ஈடு / 14158

1. பொன்னர் சிற்றம்பலம், பெண்
2. அன்னப்பிள்ளை, மூளாய். — வழக்காளிகள்

எதிராக

1. கந்தர் அருமைத்துரை, மூளாய் தெற்கு, சுழிபுரம்.

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் ஈடு 14158 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் காணியை 1982-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் (ஐப்பசி) 18-ந்திகதி 10மணி தொடக்கம் அக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபா 1520/-வும் மேலும் ரூபா 1000/- வருடமொன்றுக்கு நூற்றுக்கு 12 வட்டிவீதம். வழக்கு அணைத்த திகதியாகிய 1973-ம ஆண்டு ஐப்பசிமாதம் 23-ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1975ம் ஆண்டு ஐப்பசிமாதம் 17-ந் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத் தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 433/- (இதில் நடைபெற்ற செலவு ரூபா 278-30) நடைபெற வேண்டிய செலவு ரூபா 80-45. மேலதிக சமயாசமயச் செலவு ரூபா 74-25 கொடுக்கவேண்டியிருப்பதாலும்.

### ஆதனடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி சங்கானைக் கோவிற்பற்று மூளாய் இறை 'ஒடுவன் புலம்' பரப்பு நில இலா 3, பயிர்களும் எல்லைகிழக்கும், தெற்கும் கணபதிப்பிள்ளை பெரியதம்பியின் ஆதனம். வடக்கு; தாமோதரம்பிள்ளை அம்பலவாணரின் ஆதனம். மேற்கு: ஆறுமுகம் கந்தரின் ஆதனம். இதடங்கலும்.

சோம. சி. குலநாயகர், N. P.,
நீதிமன்ற விற்பனவு ஆணையாளரும்,
மதிப்பாளரும்,

104, தேவாலய வீதி,
சங்கானை,
2?-8-1982.
தொலைபேசி; எண்: 23246 - யாழ்ப்பாணம். 4578

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல: MB 13668

கணபதிப்பிள்ளை சிவபாதமும் பெண் சரஸ்வதி இருவரும், நொத்தாரிஸ் ஒழுங்கை, அரியாலை. — வழக்காளி

எதிராக

1. கணபதி வெள்ளையனின் காலம்சென்ற தெய்வானை
2. முதலாம் எதிரியான காலம்சென்ற தெய்வானையின் தத்துவகாரனுன வெள்ளையன் கந்தையா,
3. வெள்ளையன் சின்னத்துரை எல்லோரும், ஆசீர்வாதப்பர் ரேட்டு, அரியாலை. — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டில் MB 13668ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1982ம் ஆண்டு புரட்டாதி மாதம் 28-ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1-45 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபா 5088/-ம் 23-3-73 தொடக்கம் 23-9-74 வரைக்கும் ரூபா 3200/-க்கு 12% வீதவட்டியும் அதன்பின். முழுத்தொகையும் இறுக்கும்வரைக்கும் 5 % வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 740 சதம் 67இம் முழுத் தொகையிலும் ரூபா 4000/- கழித்து மிகுதி முழுவதும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டுக்குளி கோவிற்பற்று சிவியா தெருவில் உள்ள மடத்துப்புலமும் வண்ணக்கன் குலத்துவயல் என்னும் இரண்டு நிலப்பரப்பு (பர. நில. இல. 2) காணியும் அதுள் அடங்கிய வீடும் வான்பயிர், வளர்பயிர்களும். மேற்கு. எல்லையில் உள்ள கிணற்றில் பங்கும். இதற்கு எல்லைகள் கிழக்கு சவிரிமுத்து சின்னத்துரை, வடக்கு: ரேட்டு, மேற்கு: ஒழுங்கை தெற்கு: மத்தீசு பொன்னுத்துரை இதடங்கலும்.

சி. சோ. நரசிங்கம் J. P.
நீதிமன்ற விற்பனையாளரும்
மதிப்பாளரும்

தொல்புரம்.
12-8-82
4586

---

## சவூதி அராபியாவில் வேலை ஆட்கள்

(LABOURER GRADE)

# உடனடியாகத் தேவை!

பிரமாணம்:

உயரம்:- 5' 2'' க்கு மேலும்
நெஞ்சு:- (CHEST) 32''க்கு ,,
நிறை:- 110 இருத்தலுக்கு மேல்.
வயது:- 22க்கும் 45க்கும் உட்பட இருக்க வேண்டும்.

தகுதியானவர்கள் பாஸ்போட்டுடனும், ஒரு போட்டோ கொப்பியும் தங்கள் முழு விபரத்தையும் ஆங்கிலத்தில் (HANDWRITTEN APPLICATION) எழுதிக்கொண்டு கீழ்க்காணும் யாழ்ப்பாண விலாசத்தில் வரும் செவ்வாய்க்கிழமை (21-09-82)லும், புதன் கிழமை (22-09-82) லும் காலை 8-00 மணி தொடக்கம் மாலை 3-00 மணி வரை நேர்முகப் பரீட்சைக்கு வரவும்.

எங்களுக்கு வேறு ஒரு ஏஜன்சியும் யாழ்ப்பாணத்தில் கிடையாது.

வே. இரத்தினசபாபதி,
கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையம்,
5, இலந்தைக்குளம் ரேட்,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

**Construction & Development Co Ltd,**
37, S. de S. Jayasinghe Mawatte,
NUGEGODA.
Labour Licence No. 96, Ref. No. FE / 1 /118
(4543)

# ★ மேற்கு பெய்ரூட்டில் பயங்கரம்:

# 1400 பாலஸ்தீன அகதிகள்

# இரு முகாம்களில் படுகொலை

## ★ ஐ.நா.செயலாளர் அதிர்ச்சி

## அமெரிக்கா பலத்த கண்டனம்

பெய்ரூட், செப். 19

பெய்ரூட்டினுள் பஷீர் கமாயலின் மரணத்தையடுத்து ஊடுருவலை மேற்கொண்ட இஸ்ரேலியப் படைகள் இங்குள்ள இருபாலஸ்தீன அகதிகள் முகாம்களில் சுமார் 1400 பாலஸ்தீன அகதிகளைக்கொன்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மே. பெய்ரூட்டின் ஷகிலா, ஷப்ரா என்ற இரு முகாம்களில் இருந்த பாலஸ்தீன அகதிகளே இவ்வாறு இஸ்ரேலியப்படைகளால் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த முகாம்களினுள் பிரவேசித்த இஸ்ரேலிய துருப்புகள் . இங்கிருந்தவர்களை சுவர்களை நோக்கிய வண்ணம் கைகளை உயர்த்தியபடி நிற்குமாறு பணித்தே கொலைசெய்தனரென்றும் தெரிவிக்கப்பட்டது.

'ராய்ட்டர்' செய்திஸ்தாபனம், பெண்களும், சிறுவர்களதும் உயிரற்ற உடல்கள் இந்த பாலஸ்தீன முகாம்களுக்கு வெளியே துர்நாற்றம் வீசும் நிலையில் காணப்படுகின்றனவென்று அறிவித்துள்ளது.

ஐ.நா. பொதுச்செயலாளர் இக்கொலைகள்பற்றி அறிந்து அதிர்ச்சியும், ஆழ்ந்த கவலையும் கொண்டுள்ளாரெனத் தெரிவிக்கப்பட்டது அமெரிக்க அரசும் இதுகுறித்து தனது பலத்த கண்டனத்தைவாஷிங்டனிலுள்ள இஸ்ரேலிய தூதரிடம் தெரிவித்துள்ளது.

பாலஸ்தீன இயக்கத்தலைவர் ஜனுப் யாஸீர் அரபாத் இஸ்ரேலியர்களின் இக்கொலைகள் குறித்து உரியநடவடிக்கைகளை உடன் எடுக்கும்படிபிரான்ஸ், சோவியத்ரஷ்யா ஆகிய நாடுகளின் தலைவர்களுக்கும், புனிதபாப்பரசருக்கும்வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இஸ்ரேலிய இராணுவ அதிகாரி யொருவரிடம இக்கொலைச்சம்பவம் குறித்து வினவியபோது, இதனைத் தம்மால் ஊர்ஜிதம் செய்யவோ நிராகரிக்கவோ முடியாதிருக்கின்றதெனத் தெரிதத்தார். (கி)

## ✶ இன்று கூடும் ஐ. நா. கூட்டத் தொடரில் போக்லாந்து பிரச்னை

வாஷிங்டன், செப். 19

ஐ. நா. பொதுச் சபையின் 37வது கூட்டத்தொடர் நாளை நியூயோர்க்கில் நடைபெறவிருக்கின்றது.

நிகழ்ச்சி நிரலில் மால்வினும் (போக்லந்து) தீவுகளின் பிரச்னையும் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும் என்று இருபது லத்தீன் அமெரிக்க நாடுகள் வேண்டுகோள் விடுத்துள்ளன. கூட்டத் தொடரில் ஆரம்ப கட்டத்தில் இந்தப் பிரச்னை பரிசீலிக்கப்படவேண்டும் என்றும் அவைகோரியுள்ளன.

''போக்லந்து தீவுகளை கைப்பற்றவும், அதைத் தனது காலனியாக வைத்துக்கொள்ளவும் தனக்கு உரிமையுண்டு என்ற பிரிட்டனின் வாதத்தை ஐ. நா. ஒருபோதும் அங்கீகரிக்கவில்லை; இனியும் அங்கீகரிக்காது: எனவே லத்தீன் அமெரிக்க நாடுகளின் கோரிக்கை நியாமானது; காலத்திற்கு ஏற்றது என்று சர்வதேச அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

காலனி நாடுகளுக்கும் மக்களுக்கும் சுதந்திரம் வழங்கப்படவேண்டும் என்று 1960ல் ஐ.நா, பிரகடனம் செய்துள்ளது. காலனியாதிக்கம் அகற்றப்பட வேண்டும். ஆர்ஜென்டீனுவுக்கும் பிரிட்டனுக்குமிடையேயான தகராறு சுமுகமாக தீர்க்கப்படவேண்டுமென்று 1963, 1965, 1973, 1976ம் ஆண்டுத் தீர்மானங்களில் ஐ. நா. கோரியுள்ளது. எனினும் அவை அமுலாக்கப்படவில்லை. அவற்றின் அமுலாக்கத்தை சீர்குலைத்த பிரிட்டன்; ஆர்ஜென்டீனுவுடனுன பேச்சுவார்த்தைகளை இழுத்தடித்தது: இறுதியில் போக்லந்துதீவுகள் மீது தனதுமேலாதிக்க உரிமையைமீண்டும் நிலைநாட்டுவதற்காக, ராணுவ நடவடிக்கையை மேறசொண்டது. அமெரிக்காவின் அரசியல், பொருளாதார ஆதரவு இல்லாமல், இத்தகைய இராணுவக் கொள்கையை பிரிட்டன் பின்பற்ற இயலாது என்று பார்வையாளர்கள்தெரிவிக்கின்றனர்.

## 'இருசீனு' கொள்கையைசோவியத்யூனியன் என்றும் ஆதரித்ததில்லை

### பிரஷ்னேவ் கூறுகிருர்

மாஸ்கோ, செப். 19

'இரண்டு சீனுக்கள் என்ற கொள்கையை சோவியத் யூனியன் ஒரு போதும் ஆதரித்ததில்லை; இப்போதும் ஆதரிக்கவில்லை; தைவான்மீது சீனுவின் அரசுரிமையைச் சோவியத் யூனியன் முழுமையாக அங்கீகரிக்கிறது. தைவானுக்குப் பெருமளவில் நவீன ஆயுதங்களைத் தாங்கள் விநியோகம் செய்யவில்லை என்று அறிக்கைகளை விட்டுக்கொண்டு அதேநேரத்தில் 'இரண்டு சீனுக்கள்' பற்றிய தமது கொள்கையையும் அமெரிக்கா தொடர்ந்து பின்பற்றுகிறது.'

இவ்வாறு மங்கோலியஜனுதிபதி செடன்பாலிடம் சோவியத் ஜனுதிபதி பிரஷ்னேவ் தெரிவித்தார்.

சோவியத் ஜனுதிபதி பிரஷ்னேவும், மங்கோலிய ஜனுதிபதி ஒய். செடன்பாலும் அண்மையில் சந்தித்து உரையாற்றினர். இருதரப்பு உறவுப் பிரச்னைகளைத்தவிர, ஆசிய மத்திய கிழக்குநிலவரம் குறித்தும் இரு தலைவர்களும் மிகுந்த அக்கறை செலுத்தினர்.

சோவியத் யூனியனும் மங்கோலியாவும், சீனுவுடன் மிக நீண்ட எல்லைகளைக்கொண்டுள்ளன, சீனுவுடனுன உறவுகள் குறித்து நீண்டநேரம் அவர்கள் விவாதித்தனர்.

சீனத் தலைமையின் கொள்கையில் பல அம்சங்கள், குறிப்பாகச் சீனுவின் அயல்துறைக் கொள்கை, சோஷலிச கோட்பாடுகளுக்கும் தங்களுக்கும் விரோதமாகவுள்ளது. என்ருலும், மக்கள் சீனக்குடியரசின் உள்துறை வாழ்க்கையில் தலையிடச் சோவியத் யூனியன் முயன்றதில்லை என்றும். சீனுவில் ஒரு சோஷலிச அமைப்பு இருக்கிறது என்பதை சோவியத் யூனியன் இப்போதும் மறுத்ததில்லை என்றும் உலக அரங்கில் ஏகாதிபத்தியத்தின் கொள்கையுடன் பீகிங்கின் கொள்கை ஒன்றுபட்டு நிற்பது சோஷலிசத்தின் நலன்களுக்கு முரணுனது என்றும் சோவியத் ஜனுதிபதி பிரஷ்னேவ் தெரிவித்தார்.

சீனுவை எந்தவிதத்திலும் சோவியத் யூனியன் அச்சுறுத்தியதில்லை; இப்போதும் அச்சுறுத்தவில்லை, சீனப் பிரதேசங்கள் மீது சோவியத் யூனியன் உரிமையும் கொண்டாடவில்லை. சோவியத்–சீன எல்லைப் பகுதியில் பரஸ்பர நம்பிக்கையை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் பற்றி விவாதிக்க மாஸ்கோ எந்த நிமிடத்திலும் தயாராக இருக்கிறது'' என்றும் அவர் இச்சந்திப்பில் கூறினர்.

## மொனக்கோ இளவரசியின் பூதவுடல் நல்லடக்கம்

### இறுதிச் சடங்குகளில் நான்ஸி,டயானு

லண்டன், செப். 19

கடந்தவாரம் கார் விபத்தொன்றில் சிக்கி உயிரிழந்த மொனக்கோ இளவரசி கிரேஸின் பூதவுடல் பூரண இராணுவ மரியாதைகளுடன் இன்று நல்லடக்கம் செய்யப்பட்டது.

ஐம்பத்திரெண்டு வயதான இளவரசி கிரேஸ் மொனக்கோ இளவரசரை மணமுடிக்க முன்னர் ஹொலிவூட் திரைப்படவுல்கில் கிரேஸ் கெலி என்ற பெயருடன் பிரபல்யம் பெற்ற நட்சத்திரமாக திகழ்ந்தார்.

மொனக்கோ அரசகுடும்பத்தவரின் தேவாலயத்தில் இளவரசி கிரேஸின் பூதவுடல் வைக்கப்பட்டிருந்தது. இறுதிச்சடங்குகளில் அமெரிக்க அதிபர் திரு. றீகனின் பாரியாரான, திருமதி நான்ஸி றீகன் பிரிட்டிஷ் மகாராணியின்பிரதிநிதியாக வேல்ஸ் இளவரசி டயானு ஆகியோருட்பட பல அரசியல்முக்கியஸ்தர்களும், நடிகர்கள், நடிகைகள் உட்பட ஹொலிவூட் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டார். (கி)

## 50 ரூபா அபராதம்!

[வவனியா]

தலைக்கவசம் இல்லாது மோட்டார் சைக்கில் ஒட்டிய நபர் ஒருவருக்கு வவுனியா மாவட்ட நீதிபதி திரு. எ. டி. எம். கே.பெத்தியா கொட ரூபா 50 அபராதம் விதித்தார். [க]

## ஐ. நா. வில் தீர்மானம்

## ''இஸ்ரேல் வாபஸ் பெற வேண்டும்!''

நியூயோர்க் செப். 19

மேற்கு பெய்ரூட்டிலிருந்து இஸ்ரேலியப் படைகள் உடனடியாக வாபஸ்பெறவேண்டுமென்று கோரி ஜோர்டானில் ஐ. நா. பாதுகாப்புச் சபையில் கொண்டுவரப்பட்டதீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

அமெரிக்கா இத்தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்துள்ளது.

இதனையடுத்து ஐ.நா. சபையின் பொதுச்செயலாளர் இஸ்ரேலின் நடவடிக்கை தொடர்பாக 24 மணித்தியாலத்திற்குள் அறிக்கையொன்றை வெளியிடவுள்ளதாக அறிவிக்கப்பட்டது. (வெ)

# இரு அமைச்சர்கள், வங்கி ஆளுநர் உட்பட 100 பேர் பணயம்!

## இடதுசாரிகள் திடீர் நடவடிக்கை

லண்டன், செப். 19

மத்திய அமெரிக்கநாடான ஹொண்டுயூரஸின் நிதி அமைச்சர் பொருளாதாரத்துறை அமைச்சர் மத்தியவங்கி ஆளுநர் ஆகியோருட்பட நூற்றுக்குமேற்பட்ட வர்த்தகப்பிரமுகர்கள், இந்நாட்டின் இடதுசாரி கூட்டத்தாரால் பணயக்கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர்.

பணய நாடகத்தை நடத்துவோர் கடந்தஆண்டு ஹொன்டுயூரஸ் அரசாங்கம் கைது செய்து 70 சல்வடோர் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யும்படி கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஹொன்டுயூரஸின் இரண்டாவது பெரிய நகரொன்றில் வர்த்தக சம்மேளனக்கூட்டமொன்று நடைபெற்றுக்கொண்டிருந்தபோதே இடதுசாரிகளின் இவ்வாறு அங்கிருந்தவர்களை பணயக் கைதிகளாக்கினர்.

இந்த பணய நாடகத்தை ஆரம்பித்தவேளை இருபணயக் கைதிகள் காயமடைந்தனர் இதனையடுத்து செஞ்சிலுவைச் சங்கத்தினருக்கு இக் காயமடைந்த இருவரையும் வெளியே கொண்டுசெல்ல துப்பாக்கி நபர்கள் அனுமதி வழங்கினர். (கி)

## மண்டபம் புனரமைப்பு.

(மாவிட்டபுரம்)

காங்கேசன் துறை சிமெந்துத் தொழிற்சாலை வெள்ளிவிழா மண்டபம் புனரமைக்கப்பட்டு வருகிறது.

## மணிவாக்கு

குரு ஆவதற்கு எல்லோரும் விரும்புகின்றனர். ஆனால் சீடனாக இருப்பதற்கோ எவனும் ஆவலுறுவதில்லை.
— ஸ்ரீராமகிருஷ்ணர்

# நமது நோக்கு

## ஆசிரியர் சம்பளம் மீளா(ஆ)ய்வு

வெள்ளம் வர முன் அணையைக் கட்டுவதில் துரிதப்படுகிறவர்கள் விவேகிகள்.

ஜனாதிபதி தேர்தல், அதனை அடுத்துவரக்கூடிய பொதுத் தேர்தல் ஆளுங் கட்சிக்கு பெரு வெள்ளங்களே! இதனை உணர்ந்து பல பாக்கியான பிரச்னைகளை அரசு தீர்த்து வைக்க முயல்வது இயற்கை

ஆசிரியர்கள் என்றால் நாட்டின் படித்த சமூகத்தில் மிகப் பெரிய பகுதி. அரசாங்க சேவையிலிருப்போர் அதிகமான ஆசிரியர்களானாலும் பல அரசியல் கட்சிகளில் அவர்கள் அங்கம் வகிக்கின்றனர். அவர்களுடைய தொழிற் சங்கங்கள் சில தீவிரவாத அரசியல் கொள்கைகளை ஆதரிக்கின்றன. கடந்த வேலை நிறுத்தத்தில் பங்குபற்றிய ஆசிரியர்கள் பலர் இன்னும் வேலைக்குத் திரும்பாமலிருக்கின்றனர்.

இந்தச் சூழ்நிலையில் பெருந்தொகையான ஆசிரியர்களைத் திருப்திப்படுத்த முடியுமானால் அவர்களின் சம்பளம் கணிசமான அளவுக்கு அதிகரிக்கப்படவேண்டியது தவிர்க்க முடியாதது.

ஆசிரியர் சம்பளத்தில் சிக்கலை உண்டாக்குவது அவர்கள் மத்தியிலுள்ள பலதர (தராதர) முடைய ஆசிரியப் பிரிவுகள்; சம்பள அடிப்படையில் இவர்களின் பிரிவுகளைக் குறைத்து, இயன்ற அளவிற்கு ஒரே தொழிலுக்குரியவராகையால், ஆகக்குறைந்த விகிதத்திலுள்ளவர்களுக்கு சேவையின் மேம்பாட்டுக்குரியதும், வாழ்க்கையைகடன் படாமல் நடத்தக்கூடியதுமான சம்பளமுறை வழிவகுக்கப்படவேண்டும். சேவையின் மேல் மட்டத்திலுள்ள நிர்வாகக் கடமைகள் புரியும் அதிபர் முதலியோருக்கு உயர் அதிகாரிகளின் அந்தஸ்து அளிக்கப்படவேண்டும்.

கடந்த காலத்தில் இந்தப் பெரும் பொறுப்புள்ள பிரச்னையை ஆராய்ந்த சம்பள நிர்ணயக் குழுக்கள் அனைத்தும் இதனைத் தட்டிக்கழிப்பதில் வெற்றி கண்டுள்ளனர்.

காலத்துக்குக்காலம் ஆசிரியர் வேதனம் அதிகரிக்கப்பட்டு வந்தது உண்மை. இன்றைய மொத்தச் சம்பளமுறை பார்வையளவில் பெரிதாகவிருக்கலாம் ஆனால் ஆசிரியத் தொழிலுக்கு மதிப்பளிக்குமளவில், அவர்களின் ஆற்றலை உயர்த்துமளவில் அமையவில்லை. நிரந்தர அதிகரிப்பால் பாடசாலைகள் படுமோசம்!

வெளிநாடுகளில் ஆசிரியர்களுக்கு வழங்கும் வேதனத்தை ஒப்பிட்டு நாம் இங்கொன்றும்குறிப்பிடவில்லை. அதனை எட்டிப்பார்க்க எங்கள் நாட்டுக்கு எவ்வளவு காலம் செல்லுமென்றே யூகிக்கமுடியாது; ஆனால் ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அடிஅத்திபாரமானது ஆசிரிய சேவை என்ற அந்நாடுகளின் தெளிந்த உணர்வு ஆவது இங்கு தோற்றிவிட்டால் ஆசிரியர் சம்பளம் இவ்வித மீளா ஆய்வுக்கு அடிக்கடி இலக்காகவேண்டிய அவசியம் ஏற்படாது. சமூகஅடிப்படையில் இதனை நோக்குங்கால், தம்முடைய ஒரு ரேடியோவையோ அல்லது வீணையையோ, ஒரு தக்க நிபுணனிடமல்லாமல் வேறெவரிடமும் நம்பிக்கைவைக்க அனுமதியாத பெற்றோர் தம் பிள்ளைகளை எவரும் படிப்பிக்கலாமென்ற கருத்து பரவலாக இருக்கின்றது; எனவே ஆசிரியரின் சம்பளம், அவர்களுக்கு சமூகம் அளிக்கும் மதிப்பு— இவையெல்லாம் பரவாயில்லாத பண்டங்கள். அதன் விளைவு இன்றைய பாடசாலைகளில் காணலாம்.

சில திறமைகளை உடனடியாகப் பெற்றாக வேண்டுமானால் தம் பிள்ளைகளுக்கு தனிப்பட்ட டியூஷன் ஒழுங்கு செய்வதில் எவ்வளவும் செலவழிக்க சித்தமுடையவர்களாகவும் இருக்கின்றனர்.

பாடசாலையில், பாடங்கள் மட்டுமல்ல, மன வளர்ச்சி ஒழுக்கநெறி போன்ற பல அம்சங்கள் நல்லாசிரியனில் தங்கியிருப்பதைமறந்து விடுகின்றோம்.

# மக்கள் கருத்து

## தேசிய ஐக்கிய மறுமலர்ச்சி இயக்கம்

சில கோரிக்கைகளை முன் வைத்து அன்று 17-9-51-ல் பண்ணாகம் மெய்கண்டான் பாடசாலையில் ஓர் பொதுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தோம்.

உடல்நலக் குறைவு காரணமாகப் பெரியார் ஹன்டி பேரின்ப நாயகத்தார் சமுகமளிக்க இயலாமையால் திரு. கு. வன்னியசிங்கத்தார் தலைமையில் நிகழ்ச்சிகள் சிறப்புற நிறைவேறின.

ஹன்டி மாஸ்ரரைத் தலைவராகவும், திரு. க. ச. கந்தசாமியைச் செயலாளராகவும் திரு. மா. பரமகுருவைப் பொருளாளராகவும் மற்றும் பல அறிவியல் ஆசிரிய பரம்பரையினரைச் செயற்குழுஉறுப்பினராகவும் கொண்ட தேசிய ஐக்கிய மறுமலர்ச்சி இயக்கம் மலர்ந்தது.

அரசாங்கத்தின் ஆக்க அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல உதவுவதுடன்—தவறுகள் ஏற்படுமிடத்துக் கண்டன நடவடிக்கைகளையும் மேற்கொண்டது இந்த ஸ்தாபனம். அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம்—இலங்கைச் சர்வோதய சிரமதான சங்கம் போன்ற பாரம்பரிய அமைப்புகளுடன் தொடர்புகொண்டு தேசிய ஐக்கிய சிரமதானப் பணிகளாற்றுவதில் அதி தீவிரமாய் ஈடுபட்டது.

சமீபகாலத்தில் காந்தீயத்தின் அனுசரணையுடன் வவுனியா அகதிகள் மத்தியில் விரிவான செயற்பாடுகளில் ஈடு

(5-ம் பக்கம் பார்க்க)

## இருவித ரத்தக் களரி: வலதும், இடதும்

மேற்கு பெய்ரூட்டில் இஸ்ரேலிய படைகள் மீண்டும் ஆக்கிரமிப்பதைக் கண்டிக்கும் தீர்மானம் ஒன்றை ஐ. நா. பொதுச் சபை நிறைவேற்றியிருக்கின்றது; அது அதிசயமல்ல; ஆனால் அந்தப் பிரேரணையை அமெரிக்கா ஆதரித்து வாக்களித்திருக்கின்றது; அது புதினமே.

லெபனான் இரத்தக்களரிக்கு பலியாவதும், மத்திய கிழக்கு ஒரே இரத்தக் கடலாகவோ அல்லது பாலைவனமாகவோ மாறுவதை, வல்லரசுகள் அமெரிக்காவோ ரஷ்யாவோ விரும்பமாட்டா. இருப்பினும் இஸ்ரேல் அமெரிக்காவின் ஆணை— ஏன் கட்டளைப்படி என்றும் நடக்குமென்று கருத இடமில்லை. பாலஸ்தீனியா படை எதுவானாலும், அதால் இஸ்ரேலுக்கு ஆபத்து என்று மாற்ற முடியாத கொள்கை போல் செயற்படும் இஸ்ரேல், ஜனாதிபதி ரீகனுக்கே "ஐயா நீங்கள் உங்கள் அலுவலைப் பாருங்கள்" என்று சொல்லும் ஆங்காரம் பெற்றிருக்கிறது. இந்தக் கட்டத்திலும் இஸ்ரேலை அமெரிக்கா கைவிடமாட்டாது.

கடைசியாகக் கிடைத்த செய்தி லெபனானிலுள்ள 2000 பாலஸ்தீனிய கொரில்லாக்களை இஸ்ரேலிய படைகள் கொன்றுவிட்டனரென்பது; இது நடக்க முடியாத அல்லது நம்ப முடியாத அக்கிரமம் என்று கொள்ள முடியாது.

பல பொருளாதார அரசியல் பிணக்குகள் அதிகரித்து வரும் மூன்றும் உலக நாடுகளில், வல்லரசுகளின் ஆதிக்கம் நிலைமையை மோசப் படுத்துவதும், உள்ளூர்க் கலகத்தை உண்டுபண்ணுவதும் உண்மையென்று கொள்ள இடமுண்டு.

புதிய லெபனான் ஜனாதிபதி கொலையுண்டதும், அதனை அடுத்து இஸ்ரேலிய தாக்குதல் ஏற்பட்டதும், இடதுசாரி அரசியல் ஏற்படுத்திய சிக்கலின் விளைவாயிருக்கலாமென்று ஜனாதிபதி ரீகன் சந்தேகிக்கின்றார்.

அந்த போல, இந்திய உபகண்டத்திலும், இந்துசமுத்திரத்திலும் அமெரிக்காவுக்கு என்ன உரிமை என்று ரஷ்யா சவால் விடலாம். இந்தியா இந்தச் சவாலில் அர்த்தம் கண்டால் பாகிஸ்தான் அமெரிக்காவின் பாதுகாப்பை நாடக்கூடும்.

இந்த நிலையில் சிறிலங்கா எங்கே?

## ஷேகனா வவனியா வருகிறார்

(வவனியா)

மக்கள் விடுதலை முன்னணியின் ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில்உரையாற்ற கட்சியின் தலைவர் திரு. ஷேகண விஜயவீர அடுத்த மாதம்முதலாம்திகதிவவனியா வருகின்றார்.

வவனியா நகரசபை திறந்த வெளி அரங்கில் நடைபெறவிருக்கும்இப்பிரசாரக்கூட்டத்தில் திரு. லயனல் போபக்க உட்படப்பலர் உரையாற்றுவார்கள். (க)

## "ஆசிரியருக்கு கற்பிக்கும் பாடத்தில் ஞானம் அவசியம்"

(அரியாலை)

"ஆசிரியர்கள் கற்பித்தல் விஷயத்தில் தமது பாடத்தில் முற்றாக நிறைந்த விஷய ஞானம் உடையவர்களாக இருக்கவேண்டும். அவர்கள் கற்பிக்கும்போது தமது வகுப்பில் கற்கும் மாணவர்களின் ஆற்றல்களையும் தனியான வேறுபாடுகளையும் அவதானித்து நேரத்திற்கு ஏற்றவாறு பாடத்தை மாணவனுக்கு மாற்றியமைத்துக் கற்பிக்கும் வல்லமை உள்ளவராக இருக்கவேண்டும்".

இவ்வாறு யாழ். பரி. யோவான் கல்லூரி ஆசிரியர் மன்றத்தின் சார்பில் ஆசிரியர் சேவையிலிருந்து இளைப்பாறும் திரு. ஆர். ஈ. ஏ. சேதுகாவலருக்கு அளிக்கப்பட்ட பிரியாவிடை, தேநீர் விருந்துபசாரத்தில் ஆசிரியர் திரு. கே. கணேசலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஆசிரியர் மன்றத் தலைவர் ஆசிரியர் திரு. எஸ். கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற பிரிவுபசார வைபத்தில் திரு. கே. கணேசலிங்கம் தொடர்ந்து பேசுகையில், "ஆசிரியர்களின் பாரிய பொறுப்புக்களில் ஒன்று மாணவருக்கு முன்மாதிரியாக இருப்பது உளவியல் ஆராய்ச்சிகளின்படி மாணவப்பராயத்தில் எதையும் தீர்க்கமாக யோசியாது மற்றவர்களைப் போல பாவனை செய்து பின்பற்றுவதே. அத்துடன் மாணவர்கள் கல்லூரிகளிலேயே கூடிய காலத்தை செலவழிக்கின்றார்கள். ஆகையால் ஆசிரியர்களாகிய எமது பழக்க வழக்கங்களையும் ஒழுக்கங்களையும் மாணவர்கள் கவனித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆசிரியர்களின் பழக்கவழக்கங்களைத்தான் மாணவர்களும் பின்பற்றுவார்கள் என்பதை ஆசிரியர்கள் நினைவில் கொள்ளவேண்டும்" என்றார். (அ

## நவஜீவனத்தில்

## மண்டபம் அமைக்க கனடா உதவி; வாகனமும் அன்பளிப்பு

[அரியாலை]

"நவஜீனம் புதிய வாழ்வை ஏற்படுத்துமிடமாகவும், சமுகத்தோடு சேர்ந்துவாழும் வாய்ப்பை ஏற்படுத்தும் ஸ்தாபனமாகவும் விளங்குகிறது. பலவகையான நிலைமைகளுக்குட்பட்ட பிள்ளைகள் முதல் வளர்ந்தவர்கள் வரை 363 பேர் இங்கு வாழ்கிறார்கள். இவர்களுக்குவேண்டிய உடை, உணவு, உறைவிடம், கல்வி ஆகியவற்றை இந்த ஸ்தாபனம் இலவசமாக வழங்கிவருகிறது"

இவ்வாறு பரந்தன் நவஜீவனத்தில் பெரியண்ணன் ஞாபக நிலையத்தில் நடைபெற்ற பொதுவைபவத்தில் நவஜீவன அதிபர் அருட்திரு. ஏ. சி. தம்பிராசா அடிகள் நவஜீவனம் ஆண்டறிக்கையை சமர்ப்பித்துப்பேசுகையில் குறிப்பிட்டார்.

நவஜீவன நிர்வாகக் குழுத் தலைவர் திரு, ஜே. ஜீ.அரசரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் அருட்திரு. ஏ. சி. தம்பிராசா அடிகளார் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"நவஜீவனம் கடந்த 23வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஸ்தாபனத்தின் நேரடிநிர்வாகத்தின் கீழ் காணன், உழவர் கிராமம் ஆகிய இரு பிரிவுகள் இயங்கிவருகின்றன. இங்கு விவசாயம் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. இங்கு வாழ்வோருக்கு வசதியாக கனடா அரசாங்கத்தின் நிதி உதவியுடன் ஒருமண்டபம் அமைக்கப்பட்டு வருகிறது, நிர்வாகத்தினரின் பாவனைக்காக கனடா உயர்ஸ்தானிகர்கள் ஒரு வாகனத்தையும் வழங்கியுள்ளனர். சிறுவர் பிரிவுக்கெனப் புதிய விடுதியொன்று கட்டப்பட்டு வருகிறது. இதே ஸ்தாபனத்தை நிர்வகிக்கும் நிர்வாகிகள் இந்த ஒன்றியத்திலேயே வசிக்கவேண்டும். இவர்களுக்கெனச் சொந்தமான காணி பூமியோ தனியானசேமிப்போ அல்லது வேறுவகையான வருவாயோ இருக்கக்கூடாது. கல்வி கற்கும் பிள்ளைகளுக்குப் பாடசாலைநேரம்முடிவடைந்த பின்னர் தனியாகக் கல்வி போதனை மேற்கொள்ளப்படுகிறது. அடுத்த ஆண்டு தொடக்கம் பிள்ளைகளுக்கு 3ம் வகுப்புத்தொடக்கம் மேல் வகுப்புவரை ஆங்கில பாடபோதனையை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது"

அருட்திரு ஜே. ஜே. இரத்தினராசா அடிகளார் ஜெபத்துடன் ஆசீர்வாதம் வழங்கினர். (அ)

## வடக்கில் எண்ணெவள ஆய்வு: மற்றொரு அமெரிக்க கப்பல்வந்துள்ளது!

(மாவிட்டபுரம்)

வடபகுதிக் கடலில் எண்ணெய் வள ஆய்வு வேலைகளை மேற்கொள்வதற்காக மற்றுமொரு அமெரிக்க ஆய்வுக் கப்பல் காங்கேசன்துறைக்கு வந்துள்ளது.

வடபகுதிக் கடலில் எண்ணெய் வள ஆய்வுகளை நடத்த ஏற்கனவே அமெரிக்க ஆய்வுக் கப்பல் ஒன்று இங்கு வந்து ஆய்வுவேலைகளில் ஈடுபட்டிருந்தது.

இக்கப்பல் தனது ஆய்வுகளின் விபரங்களை சிங்கப்பூருக்கு அனுப்பிவைத்துள்ளதாகவும், அங்கு அவற்றை ஆராய்ந்த பின்பே பெறுபேறுகள் தெரியவருமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் தற்போது மேலும் ஒரு அமெரிக்க ஆய்வுக் கப்பல் காங்கேசன்துறைக்கு வந்துள்ளது.

'மிஸ். லெடி' என்னும் பெயருடைய இந்த அமெரிக்க ஆய்வுக்கப்பல் சிங்கப்பூரிலிருந்து இங்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கப்பலும் எண்ணெய் வள ஆய்வுக்காக வந்திருக்கலாமென அறியப்படுகிறது.

இலங்கைப்-பெற்றோலியம் கூட்டுத்தாபனமும், அமெரிக்க 'சிற்கோ' நிறுவனமும் இணைந்து இந்த எண்ணெய் வள ஆய்வில் ஈடுபட்டுள்ளன. (க)

## ★ ஜனாதிபதி தேர்தல்களம்

# வேட்பாளர்களை நாடிவரும் ஜனாதிபதியின் கடிதம்

(கொழும்பு)

'நண்பர்களே வாருங்கள்! சுதந்திரமான தார்மீகமான சமுதாயமொன்றை அமைக்க நாமெல்லோரும் ஒன்றுசேப் பயணம்செய்வோம்' என்ற வாசகத்துடன் கூடிய கடித உறைகளினுள் ஜனாதிபதி திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தன எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தம்மை ஆதரிக்கக் கோரும் கடிதங்களை வைத்து இந்த நாட்டின் சகல வாக்காளர்களுக்கும் அவற்றை அனுப்பிவைத்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட வாசகங்கள் கடித உறைகளின் மேல் மட்டுமல்லாது உள்ளே இருக்கின்ற கடிதங்களின் இறுதி வசனமாகவும் அமைந்துள்ளன

ஜனாதிபதி ஜே ஆர். மேலும் அக்கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது:-

'நாமெல்லோரும் நமது குழந்தைகளின் எதிர்கால மேம்பாட்டிற்காக அவர்களைப் பருவத்தில் நாமிருந்ததைவிட சிறப்பானவாழ்க்கைமுறையை அமைத்துக்கொடுக்க விரும்புகிறோம்.

எனவே முயற்சிகள் மூலமாகவும், தியாகங்கள் மூலமாகவும் இன்றையஇளைஞர்களுக்கு நல்ல எதிர்காலத்தை அமைத்துக்கொடுக்க நான் எனது முயற்சிகளை வழங்குவேன்!

தமது அரசியல் அமைப்புச் சட்டம்பற்றி இக்கடிதத்தில் பிரஸ்தாபித்திருக்கும் ஜனாதிபதி, மக்கள் எவ்வித துன்புறுத்தலோ, பயமோ இன்றித் தமது நடவடிக்கைகளை இந்த நாட்டின் சட்டங்களுக்கமையவும், அவர்களுக்குரிய உரிமைகளுக்கமையவும் நடத்தக் கூடியதாகவிருக்கின்றதென்று தெரிவித்துள்ளார்.

உலக பொருளாதாரநிலை எமக்குப் பிரச்னைகளை தோற்றியிருக்கின்றதென்பதை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, இந்த நிலை நீடிக்காதிருக்க தாம் முயற்சிகளை எடுத்துவருவதாகவும், இதுவரை இப்பிரச்னைகளைத் தீர்க்க எவரும் நல்ல திட்டங்களை வகுத்தது கிடையாது என்று அக்கடிதத்தில் தெரிவித்துள்ளார். [கி)

# "நெடுந்தீவில்பெருந்தொகைபனைஇருந்தும் பயன்படுத்தப்படவில்லை"

## உதவி அரசாங்க அதிபர் கவலை

[நெடுந்தீவு]

வசதிகள் குறைந்த ஒரு இடத்தில் மேலும் வசதிகளற்ற ஒருபகுதியில் மக்கள் மிகுந்த கஷ்டத்துடன் வாழ்வதை இங்குஅவதானிக்க முடிகிறது. இப்பகுதியில் பனைவளங்கள் சிறந்துகாணப்படுவதால் அவற்றின் மூலம் கிடைக்கக்கூடிய வருமானங்களைப் பெற இப்பகுதி மக்கள்முயற்சி செய்யவேண்டும். நெடுந்தீவின் வருவாய்க்குறைக்குப்புத்துயிரளிக்கக் கூடியதான மூயி வளம் ஒன்றுமிகக் கூடுதலாக இருக்கிறது என்றால் அது இங்குள்ள லட்சக்கணக்கான பனைகளையே குறிக்கும். இவ்வளவு பெருந்தொகையான பனைகள் இருந்தும்கூட சொற்ப அளவிலாவது அதன் பயனைப்பெற இங்குள்ள மக்கள் ஆர்வம் காட்டாதது வேதனைக்குரியது.

இப்பகுதியில் ஒரு சனசமூக நிலையம் நிறுவுமாறு கேட்டுள்ளனர். இதுபற்றித் தொகுதிப்பாராளுமன்ற உறுப்பினருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு நெடுந்தீவு மேற்கு வட்டகாடு பகுதியில் பனம்பொருள் கொள்வனவு நிலையத்தைத் தொடங்கிவைத்துப் பேசியநெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ மகாலிங்கம் கூறினார்

திருமதி கதிரேசுவின் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் நெடுந்தீவுப் பிரதேச சபைத் தலைவர் திரு. சி. வ. சங்கரப்பிள்ளை உரையாற்றுகையில் இப்பகுதி மக்களின் பிரயாண வசதிக்காக பஸ்சேவையை இந்த வட்டாரத்திநூடாக நடாத்த வேண்டும். இங்குளள பிரதான பாதை சீரமைக்கப்பட வேண்டும். கிராமோதய சபை மூலம் சிரமவானப் பணிகளை இப்பகுதியில் மேற்கொள்ளத் தீர்மானித்திருக்கின்றோம்'' என்றார்.

இந்நிகழ்ச்சியில் நெடுந்தீவு ப.நோ.கூ.ச. தலைவர் திரு. நா. இராமச்சந்திரன். விசேட சேவை அலுவலாளர் திரு. ந. நடராசா, திருமதி. த. முத்துப்பிள்ளை, திருமதி. சே. கதிரேசு ஆகியோரும் உரையாற்றினார்கள். (அ)

# டிராக்டலிடரால் விழுந்தவரை பாம்பு தீண்டியது!

(துணுக்காய்)

பனையால்விழுந்தவனை மாடு ஏறி மிதித்ததாகக் கதை உண்டு. ஆனால் மல்லாவிப் பகுதியைச்சேர்ந்த இளைஞர் ஒருவர் நெற்சூடு அடிக்கும் போதுஉழவுயந்திரத்திலிருந்து தவறிக் கீழே விழுந்து காயத்திற்குள்ளானார். காயத்துக்குள்ளான அவரைச்சிறிது நேரத்தில் பாம்புதீண்டியது இதுபற்றித் தெரியவந்ததாவது:

மல்லாவிப்பகுதியைச் சேர்ந்த இவ்வாலிபர் துணுக்காய்ப்பகுதியிலுள்ள தென்னியன்குளம் கிராமத்தில் தனது உழவு யந்திரத்தினால் சூடு அடித்தார். இரவுவேளையில் சூடு அடிக்கும் பொழுது களைப்புத் தலைதூக்கவே வாலிபன் மெசினிலிருந்து கீழே விழுந்து பலத்தகாயத்துக்குள்ளானார்: அங்கு நின்றவர்கள் அவ்வாலிபரைத் தூக்கி சில முதலுதவிகளைச் செய்து வயலில் படுக்க வைத்துக்களைப் பாற்றினார்கள். வயலில்சூடடிப்பு வேலைகளை அங்குநிறவர்கள் செய்துகொண்டிருந்தனர்

அவ்வாலிபர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது விஷப்பாம்பு ஒனறு அவரைத்தீண்டிவிட்டது. வயலில்வேலைசெய்தவர்களுக்கு இது விஷயம் எட்டவே. உடனடியாக விரைந்து வந்து அந்தவாலிபரை மல்லாவி அரசினர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனர். அங்கு கடுமைப்படுததியதால் அவர் கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டு உடனடியாக சிகிச்சை மேற்கொள்ளப்பட்டார்.

இப்போது அவரது உடல் நிலை ஒரளவு தேறிவருவதாக தெரிவிக்கப்பட்டது. [அ]

## ஜனாதிபதி தேர்தல்

# வன்னி மாவட்டத்தில் 119095 வாக்காளர்

(வவனியா)

ஜனாதிபதிதேர்தலையொட்டி வன்னி தேர்தல் மாவட்டத்தில் 950 அதிகாரிகள் வாக்களிப்பு நிலையங்களில் கடமையாற்றவுள்ளனர். 137 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டிருகிறது வன்னிமாவட்டத்தில் மொத்தம் 119095 வாக்காளர் உள்ளனர்.

மன்னாரில் 40,968 வாக்காளர்களும்வவனியாவில் 43,655 வாக்காளரும் முல்லைத்தீவில் 34,472வாக்காளர்களும்ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க தகுதி உடையவர்கள் என வவனியா கச்சேரி தேர்தல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

தேர்தலை முன்னிட்டு வாக்காளர் அட்டைகள் எழுதும் வேலைகள் மும்மரமாக நடைபெற்று வருகின்றது.

வன்னி தேர்தல் பகுதி தெரிவு அத்தாட்சி உத்தியோகஸ்தராக வவனியா அரசாங்க அதிபர் திரு.கே. சி. லோகேஸ்வரன் செயல்படுவார்.

வவனியா கச்சேரியில் வைத்தே வன்னி மாவட்ட வாக்குகள் எண்ணப்படவுள்ளது. [க]

# இவர்களுக்கு 100 ரூபா சம்பள உயர்வு!

(கரவெட்டி)

இலங்கை மத்திய போக்குவரத்துச்சபையின் பிராந்திய போக்குவரத்துச்சபை ஊழியர்களுக்கு நூறுரூபா சம்பள உயர்வு கிடைத்துள்ளது.

ஆறும் தரத்திற்குக் கீழ்ப்பட்ட தரங்களைச் சேர்ந்தஊழியர்களுக்கு இம்மாத வேதனத்துடன் ஆடி, ஆவணி மாதங்களுக்குரிய நிலுவைப் பணமும் சேர்த்து இச்சம்பள உயர்வு வழங்கப்படும். (அ)

# புதிய பஸ்சாலை

(மன்னார்)

மன்னாரில் நிர்மாணிக்கப்பட்டு வரும் வட பிராந்திய போக்கு வரத்துச் சபையின் புதிய பஸ்சாலைக்கட்டிட வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. இவ்வருட இறுதிக்குள் இச்சாலை திறக்கப்படக் கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகிறது. (கர-நிரு)

## அரிசி விற்பனை நிலையம்

# மூடப்பட்டுள்ளதால் பாவனையாளர் பாதிப்பு!

[மாவிட்டபுரம்[

சுன்னாகத்தில் இயங்கிய நெற்சந்தைப்படுத்தும் சபையின் நியாயவிலை அரிசி விற்பனை நிலையம் பலமாதங்களாகப் பூட்டிக்கிடப்பது குறித்து பாவனையாளர்கள் கேள்வி எழு புகிறார்கள்.

சுன்னாகம், காங்கேசன்துறை தெல்லிப்பழைப் பகுதி பாவனையாளர்கள் மேற்படி சுன்னாகம் நியாயவிலை அரிசி விற்பனை நிலையம் மூலம் நியாய விலையில் அரிசியை பெற்று வந்தனர்.

ஆனால் தற்போது அரிசி விலை நாளுக்கு நாள் ஏறிவரும் நிலையில் இந்த அரிசி விற்பனை நிலையம் தொடர்ந்து பூட்டப்பட்டிருப்பதால் பாவனையாளர் மத்தியில் கேள்வி எழுப்பப் படுகிறது.

இப்பகுதி கூட்டுறவுச் சங்களிலும் சரி, தனியார் கடைகளிலும் சரி தற்சமயம் அரிசி விலை அதிகரித்து வருகிறது. கிலோ 5-50 வரை விற்கப்பட்ட புழுங்கல் அரிசி 6-50 வரை உயர்ந்து விட்டது ஏனைய பச்சை அரிசிகளும் விலை உயர்ந்துள்ளள.

அரிசிவிலை மற்றய இடங்களில் ஏறினாலும் நியாய விலைக்கு அரிசுயைப் பெறுவதற்கு சுன்னாகம் நெற்சந்தைநப்படுத்தும் சபையின் அரிசி விற்பனை நிலையத்தையே பானையாளர்கள் பயன்படுத்தி வந்தனர்.

இதுமாதிரியான அரிசி விற்பனை நிலையமொன்றை காங்கேசன்துறையிலோ, மாவிட்டபுரத்திலோ நிறுவுமாறு பழைவீமன்காமம் பாவனையாளர் சங்கம் முன்னர் கோரியபோது சுன்னாகத்தில் மேற்படி நிலையம் சிறப்பாக சேவை புரிவதாகவும் மேலும்அரிசிவிற்பனை நிலையங்களை திறக்கமுடியாதெனவும் நெற்சந்தைப்படுத்தும் சபை அறிவித்திருந்தது. ஆனால் இன்று சுன்னாகம் அரிசிவிற்பனை நிலையம் பல மாதங்களாக பூட்டிய நிலையில் உள்ளது.

இது குறித்து நெற்சந்தைப் படுத்தும்சபை நடவடிக்கை எடுத்து நியாயவிலையில் அரிசி கிடைக்க வழிவகுக்குமாறு பாவனையாளர் கோருகின்றனர்.

# இன்று ஆரம்பம்

(கரவெட்டி)

இமையாணன் சமரபாகு கலாவோடை என்னும் இடத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பன்னவேலை பயிற்சி நிலையம் இன்றுதிங்கட்கிழமை தொடக்கம் இயங்கவுள்ளது,

## ஐ. தே. க. குழு

# இன்று மன்னாரில் கூடுகிறது

(மன்னார்)

மன்னார் மாவட்ட ஐ, தே. கட்சி ஆதரவாளர்கள் குழுக் கூட்டம் இன்று மன்னார் அயின் படமாளிகையில்நடைபெறும்.

முன்னாள் மன்னார் எம். பி. ஜனாப் எம். எஸ். ஏ. றகீம் தலைமையில் நடைபெறும். இக்கூட்டத்தில் அடுத்தமாதம் 2ஆம் திகதி மன்னாருக்கு விஜயம் செய்யும் ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜயவர்த்தனவை வரவேற்பது தொடர்பாகவும், மன்னார் மாவட்டத்தில் ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்வது தொடர்பாகவும் ஆராயப்பட்டு இறுதி முடிவுகள் எடுக்கப்படும். (க)

# தேசிய ஐக்கிய...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட இவ்வியக்கம் தற்போது சுழிபுரம காட்டுப்புலத்தில் சிறுவர்பாடசாலை-வீதி அமைப்புப்பணிகளைச்சிறப்புற நிறைவேற்றியுள்ளது.

திரு. வன்னியசிங்கத்தார் அமரத்துவம் பெற்ற நினைவு தினத்தில் தே. ஐ. ம. இயக்கத்தின் 30 ஆண்டு நிறைவையும் நினைவு கூரும் போது தற்போது நாட்டில் நிலவும் மக்களின் நல் வாழ்வுக்கும் இறைமைக்கும் பங்கமான சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு அனைத்து முற்போக்கு சக்திகளும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென விநயமாக வேண்டிக்கொள்ளுகின்றோம்.

க. ச. கந்தசாமி
பொதுச்செயலாளர்,
சாந்தகோட்டம்,
சங்கானை.

# கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டைத் தொகுதியிலுள்ள சனசமூக நிலையங்களுக்கான கருத்தரங்கொன்று இம்மாதம் 27-ம் திகதி வட்டுக்கோட்டை உப அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இப்பகுதி சனசமூகநிலையங்களுக்கான நிர்வாகிகளுக்கான இக்கருத்தரங்கை சனசமூக நிலையங்களின் மேற்பார்வை உத்தியோகத்தர் திரு. வி. கந்தசாமி நடத்தவுள்ளார். (வண்.)

# வெள்ளிவிழா கொண்டாடினர்

(கிளிநொச்சி)

திருச்சிலுவை கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்செல்வி எம். எலிசபெத் தமது துறவறவாழ்வின் வெள்ளி விழாவை விமரிசைகாகக் கொண்டாடினர். யாழ். புனித அடைக்கலமாதா ஆலயத்தில் மேற்றிராசனச் செயலாளர் வண. பிதா. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தலைமையில் நன்றித் திருப்பலி நடைபெற்றது.

# வாய்த்தர்க்கம்: இளைஞன் பலி!

(வவனியா)

வாய்த்தகராறு காரணமாக மூண்ட பிரச்னை, இளைஞன் ஒருவனைப் பலி கொண்டது இதன் எதிரொலியாக மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் வவனியா பொலிஸ் பிரிவிள உள்ள பாவற்குளம்-குருஞ்சன் குளத்தில் நிகழ்ந்துள்ளது.

கந்தையா கணேசமூர்த்தி என்னும் இளைஞனே மரணமானவராகும்.

பாவற்குளத்தில் உள்ள நீர்ப்பாசன விடுதியில் இருசாராருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டதென்றும் இறந்தவர் அங்கு சென்ற போது இவருடைய தலையில் இரும்புக் கம்பியால் அடி விழுந்ததாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக வவனியா பொலிசார் சந்தேகத்தின்மீது பி. கணேஷ், பீ. முருகேசு, என். தியாகராசா ஆகிய மூவரையும் கைது செய்துள்ளனர்

விசாரணைகளை சப் இன்ஸ்பெக்டர் திரு. ஜோசப்பு மேற்கொண்டுள்ளார்.

## எதிரிகளே குறுக்கு விசாரணை செய்தனர்!

# "பொலிஸ் நிலையத்தில் தலைகீழாக என்னைத் தொங்கவிட்டது உண்மை" - சாட்சி

(சாவகச்சேரி)

''சம்பவதினம் ஒரு சோடி காப்பும், ஒரு சங்கிலியும் 2-ம் எதிரி கொண்டுவந்து விற்றுத் தரும்படி என்னிடம் கேட்டார். அவற்றை 8000 ரூபாவுக்கு விற்று 2-ம் எதிரியிடம் பணத்தைக் கொடுத்தேன். அப்பொழுது 1-ம் எதிரியும் பக்கத்தில் நின்ருர்''.

நகைத்திருட்டு வழக்கில் சாட்சியமளிக்கையில் அமான் என்பவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதி ஜனுப் எம். எச். காரியப்பர் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 80 நவம்பர் 12ல் மீசாலை மேற்கைச் சேர்ந்த வீரசிங்கம் வித்தியாசாலை துணை அதிபர் கந்தையா நடராசா என்பவருடைய வீட்டில் பட்டப்பகலில் அத்துமீறிப் பிரவேசித்து 10,000 ரூபா பெறுமதியான தங்க நகைகள் உட்பட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நிசாம், தமீம் என்பவர்கள் களவாடியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சட்டத்தரணிகளின்றித் தாங்களே சாட்சியைக் குறுக்குவிசாரணை செய்தனர்.

எதிரிகளின் குறுக்குவிசாரணைக்குப் பதிலளிக்கையில் சாட்சி கூறியதாவது:

''1-ம் எதிரியைச் சாமான் விற்கும்போதுதான் தெரியும். 1-ம், 2-ம் எதிரிகள் இருவரும் ஒன்ருக வந்து ஒன்ருகவே போனுர்கள். 2-ம் எதிரிதான் என்னேடு தொடர்பு வைத்திருந்தாலும் 1-ம் எதிரியும் பக்கத்திலே நின்ருர். 2-ம் எதிரிதான் நகையை விற்றுத் தரும்படி என்னிடம் கேட்டார். யாழ். கிளப்பில் 10 வருடமாக அவரைக் கண்டு பழக்கம்.

''பொலிஸ் நிலையத்தில் தலைகீழாக என்னைக் கட்டித் தொங்கவிட்டது உண்மை. எனினும் அடிக்கவில்லை. மிளகாய்ச்சாக்குள் தலைவிடவுமில்லை. இந்த நகையை விற்றுக்கொடுத்த வகையில் கமிசனுக 60 ரூபா பெற்றுக்கொண்டேன்.

''யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கனகரத்தினம் மனேகரன் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

அமானை எனக்கு நன்ருகத் தெரியும். ஒரு சோடி காப்புச் சங்கிலி என்பவற்றை 8000 ரூபாவுக்கு விற்றுக்கொடுத்தேன். 2 மாதங்களின்பின் அமான் பொலிசாருடன் வந்தார். அப்பொழுது நான் அவற்றை உருக்கிவிட்டேன். 14 நாட்கள் வரை வாங்கிய நகைகளை உருக்கக்கூடாது என்பதுதான் எனக்குத் தெரியும்.

''பொலிசாரின் வேண்டுகோளின்படி ஒரு சோடிக் காப்பும் சங்கிலியும் கொடுத்தேன். ஆனுல் இக்காப்பும் சங்கிலியும் அமான் தந்த சங்கிலியும் காட்புமல்ல. அது பிளெயின் சங்கிலி''

முருகேசு சின்னத்துரை, அப்துல்கமால் ஆகியோர் சாட்சியமளித்தபின்னர் அக்டோபர் 6-ந் திகதிக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (க)

## மூக்குக் கண்ணுடி திருட்டு வழக்கு:

# இரு எதிரிகளும் றிமாண்டில்!

[சாவகச்சேரி]

தெகிவளையைச் சேர்ந்த கே. எஸ் நடராசா என்பவருடைய மூக்குக் கண்ணுடியைத் திருடியதாக இருவர் சாவகச்சேரி ரம்ப நீதிமன்றத்திஞல் றிமாண்டில் வைக்கப்பட்டனர்.

இவ்வழக்கு முதல் மாவட்ட நீதிமன்றத்திலும் பின்னர் ஆரம்பநீதிமன்றத்திலும் நடைபெற்றது

இவ்வழக்கில் எதிரிகளான இராசைடா ரவி, இளையதம்பி சிவபாதசுத்தரம் ஆகியோர் மாவட்ட நீதிபதி எம்.எச்.காரியப்பர் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபொழுது இவர்களை ஆரம்ப நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிபதி பணித்தார்.

ஆரம்ப நீதிமன்ற நீதிபதி திரு. எஸ். யேசுதாசன் முன்னிலையில் எதிரிகள் ஆஜர் செய்யப்பட்ட பொழுது இவர்கள் குற்றத்தை ஒப்புக் கொள்ளவே, இவர்களது கைவிரலடையாளம் எடுக்கப்பட்டு தண்டனை அளிப்பதை இந்த மாதம் 27ம் திகதிக்கு ஒத்திப்போட்டு, அதுவரை றிமாண்டில் வைக்கும்படி நீதவான் உத்தரவிட்டார். (க-வெ)


உத்தரவாதத்துடன்

சென்னை - றூபவாகினி

ஏரியல் பொருத்திக்கொள்ளவும்

மற்றும்

உங்கள் வீட்டு மங்கள வைபவங்களை

வீடியோவில்

படம் பிடித்துக்கொள்ளவும்

வீனஸ்

றெக்கோடிங்

றேடியோ வாச் வேக்ஸ்

ஸ்ரீதர் தியேட்டர் அருகாமையில்

யாழ்ப்பாணம்.


# இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 4ம் திகதி திங்கட்கிழமை

(20—9—82)

மேடம்: கருத்தொருமித்த காதலர் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்ச்சிகள் இடம் பெறும். எதிர்ப்புக்கள் மறைந்து எதிலும் சாதாரண சூழ்நிலை உருவாகும். கண்ணியம் சேரும். கௌரவம் உயரும்.

இடபம்: எக்கருமத்தையும் எண்ணித்துணிக. அவசர முடிவிஞல் அருமையான சந்தர்ப்பத்தை கோட்டைவிடக்கூடும். வணிகர்களாயின் அதிக முதலீட்டைத் தவிர்த்துக் கொள்ளவும். நிதானம் வேண்டும்.

மிதுனம்: ஒளிமயமானநாள் ஆலய வழிபாட்டில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். உங்கள் உற்சாகத்தில் பெற்ரேர் துணை நிற்பர். விருந்தினர் வருகை வெகு கலகலப்பாக இருக்கும். பெரியோரைப் பேணவும்.

கடகம்: தொழில் துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும். மேலதிகாரிகளின் பாராட்டுக்கும் இலக்காகுவீர்கள், சிலர் வாழ்க்கையில் கடல் கடந்து பிரயாணம் ஒன்று மேற்கொள்ளப்படலாம்.

சிங்கம்: வாழ்க்கை இன்று மல்லிகைத் தோட்டம் போல் மணம் பரப்பிக் கொண்டிருக்கும். காதல் சிட்டுக்களுக்கு இன்று கவர்ச்சிசரமான தினம். பெரியோர்கள் ஆதரவும் கிடைக்கும்.

கன்னி: இன்றுஎதிலும் நிச்சயமற்ற நிலை தென்படும். மனதில் விரக்திமனப்பான்மை தலைதூக்கும். உணர்ச்சி வசப்படுவதால் வேண்டாத விளைவுகள் உருவாகும். மனஅடக்கம் நன்று.

துலாம்: தானிய நஷ்டத்துடன் பூமிப்பிணக்கும் தோன்றக்கூடும். கடமையாற்றும் இடத்தில் அதிக நிதானம் வேண்டும்.

விருச்சிகம்: மனநிறைவுக்கு இடமுண்டு. மதிப்பும்உயரும். அறிவாற்றலால் அரச யோகமும் கிடைக்கும். தொழில் புரியும் இடத்தில் திருப்தி நிலவும். சிலர் வாழ்க்கையில் இடமாற்றமும் ஏற்படலாம்.

தனு: துஷ்டர்கள் உறவு முறைகள் சங்கடத்தில் மாட்டி வைக்கும். பின்னணியில் பிளவுக்கு இடமுண்டு. வழக்குவிவகாரங்களைத் தவிர்த்துக்கொள்ளவும். உணர்ச்சிவசப்படாதிருக்கவும்.

மகரம்: வசதிகள் பெருகும். வரவிலும் திருப்தி ஏற்படும். செல்வாக்குப் படைத்தவர்களின் ஆதரவு கிடைக்கும். ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த விடயமொன்று உங்களுக்கு சாதகமான முடிவு தரும்.

கும்பம்: இதயத்தில்மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும். இனசனம் கூடுவர். புத்திர சுகத்துடன் தொழில்துறைகளிலும் புதிய வெற்றி கிடைக்கும்.

மீனம்: பகைமூட்டத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டு இருக்கிறீர்கள். சிறிய விடயத்துக்குக்கூட குறைகேட்க நேரிடும். கடற்தொழிலில் ஈடுபடுபவர்கள் கவனஞ் செலுத்தவும். துயர்படிந்த தினம்.

சோதிடக் கலாநிதி
திருமலை
கூ. வேலுப்பிள்ளை

# வடஇலங்கை சங்கீதசபை பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்

வட இலங்கை சங்கீதசபை நடாத்திய 7 -ம் ஆண்டு மிருதங்கம், நடனம், (பரதம், கதகளி) பண் இசை, நாடகம் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப்பெறுபேறுகள் தொடர்ந்து 'ஈழநாடு' இதழில் வெளிவரும். நடனம் — பரதம் கதகளி முடிவுகள் இங்கு தரப்படுகின்றன.

### நடனம்-பரதம்

### கொக்குவில்

### மூன்றும் பகுதி

#### முதலாம் பிரிவு

பரதம்: f குமுதினி சுப்பையா, f ஹம்சானந்தி பாக்கியராஜா.

### ஊர்காவற்றுறை

#### முதலாம் பிரிவு

பரதம்: அன்னெட் பமிலா சிறீநாதன்.

### தெல்லிப்பழை

#### முதலாம் பிரிவு

பரதம்: f செந்தில் செல்வி செல்லத்துரை.

#### இரண்டாம் பிரிவு

பரதம்: வாணி கந்தவனம்.

#### சாதாரண சித்தி

பரதம்: ஜெயகௌரீஸ்வரி சுதிரமலை, இராஜினிதேவி கிருஷ்ணபிள்ளை, வாசுகி இராமச்சந்திரன், மாலதி மயில்வாகனம்.

### பருத்தித்துறை

#### இரண்டாம் பிரிவு

பரதம்: குலவீரசிங்கம்.

### மூன்றும் பகுதி

#### சாதாரண சித்தி

பரதம்: சுரேக்கா பாலசிங்கம், தேவகுமாரி இரத்தினசிங்கம், வசந்தி அருணுசலம், ஜெராஜினி கோபாலசாமி.

### சாவகச்சேரி

#### முதலாம் பிரிவு

பரதம்: சுமித்திரா சபாரத்தினம், f ரூபவதனு மகேஸ்வரன்.

பரதம்: மேரி விஞேதினி இரத்தினராசா, அகல்யா செல்லத்துரை, மிர்ஞளினி ஸ்ரீநிவாசன், ரேகனு ஞானலதா செல்லையா, ஜெயானந்தி சின்னத்துரை. சுகந்தினி நாகராஜா.

#### சாதாரண சித்தி

பரதம்: சூரகலா குமாரசாமி, கிரிஜா பரமசாமி, கௌரீஸ்வரி நடேசன், சுமதி சோதிநாதன், பாரதி நவரத்தினம், தஷாயினி ஜெயசீலன், இந்திராகாந்தி காளிராசா, தபோநிதி கந்தையா.

### நடனம் - கதகளி

### முதலாம்பகுதி

#### முதலாம்பிரிவு

கதகளி: குமுதா குலசேகரம்

#### இரண்டாம் பிரிவு

கதகளி: சுஜந்தினி நடராஜா, பிறேமசயா சின்னத்தம்பி, மேரியூடித் அஞ்சுளா குமாரி நீக்கிலாப்பிள்ளை, பிலிப்ஸ் நிஷான் அஜித் கிறிஸ்ரியன், ஜெயச்செல்வி பஞ்சலிங்கம். சுபாஜினி சற்குணம், அருள்தேவி இராசேந்திரம், அமுதா குலசேகரம், வாசுகி மயில்வாகனம், சிவகௌரி சிவசுப்பிரமணியம், வதனி நவரத்தினம்.

#### சாதாரணசித்தி

கதகளி: கவிதா லோகநாயகம், துளசிகா கமலநாதன், சோபனு செல்வரத்தினம், விஜிதா பத்மநாதன், தர்சினி தர்மலிங்கம், துஷியந்தி தங்கராசா, அனுஷா சோமசுந்தரம், சத்தியபாமா சிவசுப்பிரமணியம், அஜித்தா செல்லத்துரை, கிருஷ்ணகுமாரி கணேசலிங்கம், சுஜாத்தாசெல்லத்துரை, றமா விக்னேஸ்வரன், நிர்மலா பூபாலசிங்கம்.

### முதலாம் பகுதி

#### சாதாரண சித்தி

கதகளி: பகவதாரணி சுப்பிரமணியம், மகிழினி அருளேஸ்வரன், கமலா சோமசுந்தரம், ராசுகி விவேகானந்தா, உசிந்தா மயில்வாகனம். சிவராஜினி இராஜகோபால், காயத்திரி இராசநாயகம், டொறிஸ் பொனிற்ரு ஜீவரட்னம், சோழமாதேவி கிருஷ்ணராசா, பத்மஸ்ரீ சுதிரவேலு, ஸ்ரீதயாபரி இராசரத்தினம்.

### இரண்டாம் பகுதி

#### முதலாம் பிரிவு

கதகளி: வாசுகி சுந்தரலிங்கம், சிவநங்கை தியாகராசா, திருவேணி திருநாவுக்கரசு, உமா விக்னேஸ்வரன், ஜெயந்தி இராஜலிங்கம், புவனேஸ்வரி கனகசிங்கம், புஷ்பசாந்தினி மார்க்கண்டு, கலிஸ்ரா தயாளினி மனுவல்பிள்ளை, ரேசாறியா தமயந்தி சுவீரின் கிறிஸ்ரஸ் மனுவல்பிள்ளை, தேவவேணி முத்துக்குமாரசாமி.

#### இரண்டாம் பிரிவு

கதகளி: சுகந்தினி இராசதுரை, றஞ்சினி மகாலிங்கம்.

### இரண்டாம்பகுதி

#### இரண்டாம்பிரிவு

கதகளி: சசிகலா பரமானந்தப், சிவகலாசெல்லையா, ஜெகதினி நமசிவாயம், கதிஜா கனசராசா, யசோதா சிங்கரத்தினம், யுவதிலா செல்வரத்தினம்' பராபரி சண்முகசுந்தரம், புஷ்பறஜனி மார்க்கண்டு, மரியகலா ஜோசப், யமுனு செல்வரத்தினம், சியாத்தா வாமதேவன்.

#### சாதாரணசித்தி

கதகளி: சாந்தினி குமாரவேலு.

### மூன்றும்பகுதி

#### முதலாம்பிரிவு

கதகளி: வித்தியாதேவி சரவணமுத்து, கிருஷ்ணபவானி முத்துக்கிருஷ்ணன், f பாவிலுப்பிள்ளை வின்செனற், சோபனு அருளானந்தம், தயாபரி யோச், றுவ்விஞ டொமினிக், அனற் ஐராங்கணி சூசைபிள்ளை, மேரி எடித் மஞ்சுளாகுமாரி நீக்கிலாப்பிள்ளை, f சந்திரவதனி சிவசுப்பிரமணியம், தர்மதேவி பூபாலசிங்கம், நிமலின் நடராஜா, நர்மதா அய்யாக்கண்ணு தேசிகர், அய்யாக்கண்ணு தேசிகர்ஞானசந்தரம்.

#### இரண்டாம்பிரிவு

கதகளி: இராஜரஞ்சினி இராஜரட்னம், அன் எஸ்மி கலாசியோன் சூரியகலா மயில்வாகனம், லோஜினி பாலசிங்கம், டெய்கி ரேசபெலா யேசுதாசன், (A துஷ்ஷியா மயிலானந்தன், (B கிறிஸ்ரின் லலிதா அந்தோனிப்பிள்ளை, கௌரி இரத்தினம்.

#### சாதாரணசித்தி

கதகளி: செலின்ரேஸ் பாவிலுப்பிள்ளை, ஸ்ரீநகுலகீதா நவரத்தினம், மரீஞ ஜசிந்தா சவரிமுத்து.

### பண் இசை

### முதலாம்பகுதி

#### முதலாம்பிரிவு

பண் இசை: அனுஷா நல்லையா, சுபத்திரா அம்பலவாணர். உத்தரை இரத்தினசபாபதி, சசி மயில்வாகனம், சுப்பிரமணியம் பஞ்சாட்சரம், வதஸலா சிவானந்தன், மீனலோஜினி கந்தையா, கௌசலா சிதப்பரநாதன், பாலசரஸ்வதி தில்லைநாயகம்.

(தொடரும்)

## 21 பேருக்கு அபராதம்

(சாவகச்சேரி)

பகிரங்க வீதியில் இரவு 10 மணிவரையில் வெளிச்சமின்றிச் சைக்கிளில் சென்ற சாவகச்சேரித் தொகுதியின் பல்வேறு இடங்களைச் சேர்ந்தோர் 21 பேர் சாவகச்சேரிப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுச் சாவகச்சேரி ஆரம்ப நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

நீதிபதி எஸ். யேசுதாசன் ஒவ்வொருவருக்கும் தலா 35 ரூபா அபராதம் விதித்தார்.

சாவகச்சேரிக் களியாட்டு விழாவிலிருந்து வீடுதிரும்பும் போது பொலிசார் இவர்களை கைதுசெய்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (க)

யாழ். மாவட்டத்தில்

## 560 சனசமூக நிலையங்கள் நன்கொடைப் பணம் பெறுகின்றன

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளூராட்சி இலாகாவின்கீழ் பதிவு செய்யப்பட்டு இயங்கி வரும் 560 சனசமூக நிலையங்கள் இவ்வாண்டுக்கான நன்கொடைப்பணத்தைப் பெற்று வருகின்றன.

சனசமூக நிலையங்களின் நன்கொடைப் பணமாக உள்ளூராட்சி திணைக்களம் இரண்டுலட்சத்து நாற்பத்திமூவாயிரத்து ஐந்நூறு ரூபாவை யாழ். மாவட்டத்திற்கு ஒதுக்கியுள்ளது.

அவ்வப்பகுதி உள்ளூராட்சிப் பிரிவு உப அலுவலகங்களூடாக இந்த நன்கொடைப் பணம் சனசமூக நிலையங்களின் தரத்திற்கு ஏற்ப பங்கீடு செய்யப்பட்டு வருகின்றன. 1ம் தரம், 2ம் தரம், 3ம்தரம் என மூன்று பிரிவுகளாக சனசமூக நிலையங்கள் தரப்படுத்தப்பட்டுள்ளன. முதல்தர சனசமூக நிலையங்களுக்கு முன்னூறு ரூபா முதல் 500ரூபா நன்கொடைவரை கிடைக்கும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பதிவுபெறற 560சனசமூக நிலையங்களில் இருநூற்றுக்கும் மேற்பட்ட சனசமூக நிலையங்கள் முதல்தர நிலையங்களாகும். (வண்-அ)

## மண்டைதீவுக்குப் புதிய பஸ் சேவை கிடைக்கும்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவுக் கிராமத்தின் போக்குவரத்துச் சேவைக்குப் புதிய பஸ் ஒன்றை விரைவில் சேவையிலீடுபடுத்த நடவடிக்கைஎடுப்பதாகவடபிராந்திய போக்குவரத்துச் சபையின் தலைவர் திரு. கே. கனகரத்தினம் உறுதியளித்துள்ளார்.

மண்டைதீவு போக்குவரத்துச் சம்பந்தமாக வடபிராந்திய போக்குவரத்துச் சபை சபை அலுவலகத்தில் நடந்த ஆலோசனைக் கூட்டம் ஒன்றில் இந்த வாக்குறுதி தெரிவிக்கப்பட்டது. போக்குவரத்துச் சபை பிராந்தியத் தலைவர் திரு கே. கனகரத்தினம் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் பிராந்திய போக்குவரத்துச் சபையின் அதிகாரிகளும், மண்டைதீவு கிராமோதய சபையின் தலைவர் திரு. நா. இராசலிங்கம், கிராமோதய சபையின் உறுப்பினர்கள் சிலரும் கலந்து கொண்டனர்.

இக்கிராமத்தின் போக்குவரத்துச் சீர்கேடுகள் பற்றியும், தனியான ஒருபஸ்வண்டி இச் சேவையில் ஈடுபடுத்தப்படுவது பற்றியும், மாலை நேரம் மேலதிகசேவை ஒன்றை அதிகரிக்க வேண்டியது பற்றியும் இக்கூட்டத்தில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

மண்டைதீவு தெற்குவீதி பஸ்சேவைக்கு ஏற்றவகையில் திருத்தப்பட்டதும், மண்டைதீவு 8ம் வட்டாரம் வரை பஸ் சேவையை விஸ்தரிப்பதெனவும் தலைவர் இக்கூட்டத்தில் உறுதியளித்துள்ளார். [வண்-அ]

## கல்விவள நிலையத்திற்கு 1 1/2 லட்ச ரூபா ஒதுக்கீடு!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறைத் தொகுதி கல்வி வளநிலையத்திற்கென ஓர் மண்டபம் அமைப்பதற்கு ஆரம்ப நிதியாக ஒன்றரை லட்சம் ரூபா பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளது

காங்கேசன்துறைத் தொகுதிக்கான கல்விவள நிலையம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இயங்கி கருத்தரங்குகள், பொதுஅறிவுப் போட்டிகள், கலைவிழாக்கள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

இவ்வாறான நிகழ்ச்சிகளை வசதியான முறையில் நடத்த மேற்படி கல்விவள நிலையத்திற்கென மண்டபம் ஒன்று அமைக்கப்படுவது அவசியம் என உணர்ந்து எதிர்கட்சி தலைவரும் காங்கேசன்துறை எம்.பியுமான திரு, அ.அமிர்தலிங்கம் ஒன்றரை லட்சம் ரூபாவை ஆரம்பநிதியாக பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து வழங்கியுள்ளார்.

மேற்படி கல்வி வளநிலையத்திற்கு அண்மையில் திரைப்படம் காட்டும் கருவி ஒன்றும் இந்திய தூதரகத்தினால் வழங்கப்பட்டது.

இதனை வழங்கிய இந்திய பிரதி தூதுவர் மேதகு ஆர். எம். அபியங்கார் மேற்படி கருவி இந்தியாவின் கேரள மாநிலத்திலேயே தயாரிக்கப்பட்டது என்று கூறினர்.

பிரதித் தூதுவரிடமிருந்து திரு. அமிர்தலிங்கம் இக் கருவியை கையேற்றார்.

யாழ்.பிரதம கல்வியதிகாரி திரு. எம். எம். மன்சூர் தலைமையில் நடந்த இவ்வைபவத்தை காங்கேசன்துறை வட்டாரக்கல்வியதிகாரி திரு. பொ சிவஞானசுந்தரம், கல்வி வள நிலைய செயலாளர் திரு. மு சிவராஜா ஆகியோர் செய்திருந்தனர். (க)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு – சுபாஷினி
நெஞ்சத்தை கிள்ளாதே
(கலர்)

ராஜா (யாழ். நகர்)
4 காட்சிகள்
பிரதாப்–ராதிகா
வசந்தத்தில் ஒரு வானவில்
(ஈஸ்ட்மன் கலர்)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 6–15, 9–30
சனி, ஞாயிறு 2–30
ஞானக்குழந்தை

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஆயிரம்வாசல் இதயம்

லிடோ தினசரி 4 காட்சிகள்
[யாழ்ப்பாணம்]
எம்.ஜி.ஆர்.–மஞ்சுளா
இதயக்கனி

றீகல் [யாழ்.நகர்]
தினசரி 10–30, 2-30, 6–15 9–30
ரஜனிகாந்த்–ரதி, ஜெய்சங்கர்
முரட்டுக்காளை
(கலர்)

சாந்தி யாழ்.நகர்]
19—21
Dail5y Shows
Ter ence Hill in
Mr. Billion
விரைவில்! 'நான்!'

ஸ்ரீதர் (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-மஞ்சுளா-லதா
நேற்று இன்று நாளை
எமது அடுத்த வெளியீடு
நம் நாடு

ராணி (யாழ் நகர்) இன்று 80வது தினம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
விஸ்வரூபம்
[ஈஸ்ட்மன் கலர்]
24-முதல் பணமா பாசமா

மனோகரா (யாழ்ப்பாணம்)
10–30, 2–15, 4–45, 7–15, 9–30
WANG YU in
BLOOD OF THE DRAGON
(Scope—Color—Karate Film)

5-வது மகளிர் வாரம்
வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்.நகர்)
✶ சந்திரசேகர் ✶ சுபாஷினி ✶ ராஜீவ்
பாலைவனச்சோலை
விரைவில் : சிவாஜி, வாணிஸ்ரீ
வசந்தமாளிகை இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி

## பருத்தித்துறைக்கு நவீன விளையாட்டுமைதானம்தேவை
### நகர கிராமோதயசபை தீர்மானம்

[புலோலி]

பருத்தித்துறை நகருக்கு நவீன விளையாட்டுமைதானமொன்று மிக அத்தியாவசியமானபடியால் நவீன விளையாட்டுமைதானமொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று பருத்தித்துறை நகர கிராமோதய சபைக் கூட்டத்தில் கொண்டு வரப்பட்ட பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இக்கிராமோதயசபைக் கூட்டம் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர்பணிமனையில் கிராமோதயசபைத் தலைவர் திரு. மு. பொ. வீரவாகு தலைமையில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:

''பருத்தித்துறை நகருக்கு நவீன வசதிகொண்ட தற்காலத்தேவைகளைப் பூர்த்தி செய்யும் சிறப்பான நூலகமொன்றை அமைக்கநடவடிக்கை எடுத்தல்.

பருத்தித்துறைநகரபிரதான வீதியும் நீதிமன்றவீதியும் சந்திக்கும் சந்தியிலிருந்துதுறைமுகம் வரையான வீதிக்கு 'துறைமுகவீதி'யென்றுபெயர் சூட்டுதல்.

பருத்தித்துறை மரக்கறிச் சந்தையிலும் மீன்சந்தையிலும் உள்ள சைக்கிள் பாதுகாப்பு நிலையங்களில் கடமை புரிபவர்கள் சைக்கிள் பாவனையாளர்கள் வேறு இடங்களில் சைக்கிள் களைவைத்தாலும் வலுக்கட்டாயமாகக் கட்டணம் அறவிட்டு மக்களுக்குத் தொல்லை கொடுப்பதை நகர சபைத்தலைவரின்கவனத்திற்கு கொண்டுவருதல்.

பருத்திக்கிறை நகரத்திற்கு நவீனவசதியுள்ள மலசலகூடமொன்று அமைக்கவேண்டுமென நகரசபையை கோருதல். [அ]

## வலி. மேற்கு புகையிலைச் செய்கையாளர் பாதிப்பு!

[பண்டத்தரிப்பு]

வலிமேற்குப் பகுதியில் பீடிப்புகையிலைச் செய்கையிலீடுபட்ட விவசாயிகள் தாம் உற்பத்தி செய்த பீடிப்புகையிலைகளை விற்பனை செய்யமுடியாது சிரமப்படுகின்றனர்.

கடந்த வருடங்களில் இப்பகுதியில் செய்கை பண்ணப்பட்ட பீடிப்புகையிலைகளை இலங்கை புகையிலைக் கைத்தொழில் கூட்டுத்தாபனத்தினர் விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்து வந்ததாகவும், ஆனால் இம்முறை இந்த பீடிப்புகையிலையை கொள்வனவு செய்ய முன்வரவில்லை என்றும் இதனால் இப்பகுதி விவசாயிகள்தாம் மிகவும் கஷ்டப்பட்டு உற்பத்தி செய்த பீடிப் புகையிலையை விற்பனை செய்ய முடியாது திண்டாடுவதாகவும் பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கம் எதிர்க்கட்சித் தலைவர் திரு.அ. அமிர்தலிங்கம், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் தேவநேசன் நேசையா, இலங்கைப் புகையிலைக் கூட்டுத்தாபனத் தலைவர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் தெரிவித்துள்ளது.

## இளைஞருக்கு கத்திவெட்டு
### ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில்

[பண்டத்தரிப்பு]

உடுவில் ஆலடி என்னுமிடத்தைச் சேர்ந்த நவரத்தினம் இந்திரன் என்னும் 24 வயது வாலிபர் பலத்த கத்திவெட்டுக் காயங்களுடன் ஆபத்தான நிலையில் யாழ் அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதுபற்றி யாழ். அரசினர் வைத்தியசாலைப் பொலிஸ் பிரிவைச்சேர்ந்த திரு. கதிர்காமதாசன் விசாரணை நடாத்தினார்.

பழைய பகைமையே இந்த கத்திவெட்டுச் சம்பவத்திற்குக் காரணம் என்று விசாரணையின்போது தெரியவந்துள்ளதாம்.

சந்தேக நபரான அதே இடத்தைச் சேர்ந்த இராமலிங்கம் பாலசிங்கம் என்பவரை சுன்னாகம் பொலிசார் தேடிவருகின்றனர். இவர் தலைமறைவாகி விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## தீப்பெட்டி தட்டுப்பாடு

(பண்டத்தரிப்பு)

தீப்பெட்டிகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. சில தனியார் கடைகளில் தீப்பெட்டியொன்று ஒரு ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக கூறப்படுகிறது. பண்டத்தரிப்பு பாவனையாளர் சங்கம் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளது

## தாம்போதியில் சிரமதானப்பணி

(மன்னார்)

மன்னார் மாவட்ட தேசிய இளைஞர் சேவைமன்றத்தின் 30 தொண்டர்கள் கடந்தசனி, ஞாயிறு ஆகிய இரு தினங்களிலும் சங்குபிட்டி தாம்போதி பாலம் அமைக்கும் சிரமதான பணியில் ஈடுபட்டனர்.

சிரமதானத்தில் ஈடுபட்ட தொண்டர்களுக்கு உணவு, தங்குமிடம், போக்குவரத்து போன்ற வசதிகளை மன்னார் மாவட்ட தேசிய இளைஞர் மன்றம் வழங்கியது. (க)

## உலகச் சிறுவர் ஆண்டு

[கொழும்பு]

இலங்கையில் உலகச்சிறுவர் ஆண்டுக் கொண்டாட்டங்கள் இவ்வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதற்கான ஒழுங்குகளை சிறுவர் நன்நடத்தை பாதுகாப்பு அதிகாரிகள் மேற்கொண்டுள்ளனர்.

இதில் பல தொண்டர் இயக்கங்களும் பொதுநிறுவனங்களும் பங்கு கொள்ளவுள்ளன.

# ஜனாதிபதித்தேர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

"கடந்தமாதம் 28ம் திகதி திருகோணமலையிற்கூடிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்சபை இலங்கை ஜனாதிபதி தேர்தல் பற்றி ஒரு தீர்மானம் எடுத்தது. இலங்கை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்குக் கூட்டணி ஒரு வேட்பாளரை நிறுத்துவதில்லை என்பதே அத்தீர்மானமாகும். தமிழ்ஈழவிடுதலை என்ற தமிழ் தேசிய இனத்தினதும் தமிழர் விடுதலைக் கூட்டணியினதும் மூலாதாரக் கொள்கைக்கு ஏற்ப நாம் எடுத்திருக்கக்கூடிய ஒரேமுடிவு அதுவேயாகும். சிங்கள ஆட்சியிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ள முனைந்து நிற்கும் தமிழ்தேசிய இனம் சிங்கள இனத்தின் மீது ஆட்சி செலுத்த முற்படவில்லைஎன்ற சீரிய கொள்கையின் அடிப்படையிலேயே நாம் இம் முடிவுக்கு வந்தோம்.

"அதேகொள்கையின் அடிப்படையில் நாம் எடுக்கவேண்டிய இரண்டாவது தவிர்க்க முடியாத தீர்மானம் தமிழர் விடுதலைக்கூட்டணியும் தமிழ் மக்களும் வேறொரு தமிழ்வேட்பாளரையும் ஆதரிக்க முடியாதென்பதாகும்.

"இன்றைய அரசியற் பின்னணியில் தமிழ் காங்கிரசும் அதன்வேட்பாளரும் வகிக்கும் பங்கை விளக்கவேண்டியிருக்கின்றது. தமிழ்மக்கள் ஏற்றுக்கொண்ட ஒரேதமிழ்காங்கிரஸ் 1972இல் தமிழர் கூட்டணி அமைக்கப்பட்ட நாள் முதல் அக் கூட்டணியின் அங்கமாகவே இருந்து வருகிறது. இந்நிலையை உறுதிப்படுத்தும் பொருட்டே அகில இலங்கைத் தமிழ் காங்கிரசின் நிறுவுனரும் தலைவருமான திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் 1976ல் தமிழர் விடுதலைக்கூட்டணியின் கூட்டுத் தலைமையை ஏற்றுக்கொண்டார். 1979ம் ஆண்டு புதிய தமிழ் காங்கிரசிற்கு தேர்தல் ஆணையாளரால் வழங்கப்பட்ட அங்கீகாரம் தமிழ் இனத்தின் ஒற்றுமையைச் சிதைப்பதற்கு சிங்கள அரசாங்கம் மேற்கொண்ட திட்டமிட்ட செயலேயாகும். சிங்கள ஆட்சியாளருக்கு உடந்தையாக செய்யப்பட்ட இச் செயலுக்காக புதிய தமிழ்க் காங்கிரசையோ அதன் தலைமையையோ தமிழ் மக்கள் மன்னிக்கவில்லை. இனத்தை பிளவுபடுத்தும் இக்குழுவுக்கு 1981ம் ஆண்டு பாவட்ட அபிவிருத்திச்சபை தேர்தலில் ஓர் தகுந்த பாடத்தை மக்கள் புகட்டினர். தமிழர் விடுதலைக்கூட்டணிக்கு 4,68,560 வாக்குகள் கிடைத்த அத் தேர்தலில் மிகக் குறைந்த 36,49‹ வாக்குகளையே இக் குழுவுக்கு தமிழ் மக்கள் அளித்தனர். அடுத்த பாராளுமன்ற தேர்தலுக்கு முன்னேற்பாடாக இத் தமிழ் காங்கிரசிற்கு ஒரு புதுத் தோற்றத்தைக் கொடுக்கும் முயற்சியே ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது என்ற இச் செயலாகும் ஆரம்பத்திலிருந்து சிங்கள எஜமான்களின் விருப்பத்திற்கேற்ப தமிழ் இன ஒற்றுமையை சிதைக்கமுயன்ற இக்குழு இன்று இன ஒற்றுமையைப்பற்றி பேசுவது தமது நிலையை உறுதிப்படுத்தி தமிழ் தேசிய இனத்தில் பிளவை நிரந்தரமாக்கும் திட்டமேயாகும்.

"தமிழ் ஈழத்தில் வாழும் தமிழ் மக்கள் 1977ம் ஆண்டு தேர்தலில் ஐயத்திற்கு இடமின்றி தம் ஆணையை தந்துவிட்டபின் தமிழ் மக்களின் ஆணையை பெறுவதற்கு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதாக கூறும் இரண்டாவது காரணமும் தேவையற்ற ஒன்றாகும். இன்றைய சூழ்நிலையில் தமிழ் ஈழத்திற்கு வெளியில் வாழும் வாக்காளர்களையும் சேர்த்து இன்னொரு ஆணையாக சோருவது தமிழ் மக்கள் தமிழ்ஈழம் பற்றிகொண்ட ஆர்வம் குறைந்துவிட்டது என்று சிங்கள ஆட்சியாளர் வெளியுலகத்திற்கு கூறவே வழிவகுக்கும். மக்கள் ஆணை ஒரு முறையே கொடுக்கப்படுவது, அது 1977ம் ஆண்டு கொடுக்கப்பட்டுவிட்டது. அவ் ஆணையை நிறைவேற்றும் வழிவகைகளை கண்டு செயற்படுவதே இன்று வேண்டியது. எனவே தமிழ் காங்கிரஸ் வேட்பாளர் கூறும் தமிழ் இன ஒற்றுமை தமிழ் ஈழத்திற்கான மக்கள் ஆணையை பெறுதல் என்ற இரண்டு காரணங்களும் நேர் மாறான பலனையே அழிப்பவையாக இருப்பதால் தமிழ் பேசும் மக்கள் இவற்றை நிராகரிக்கவேண்டுமென்று இப் பொதுச்சபை தீர்மானிக்கின்றது.

ஜனாதிபதி தேர்தலில் எவ்வகையிலாவது பங்குபற்றவோ போட்டியிடும் வேறு எந்த வேட்பாளரையாவது தமிழ் பேசும் மக்கள் ஆதரிக்கவோ முடியுமா என்பதே அடுத்த கேள்வி.

"இலங்கைசுதந்திரம்பெற்ற நாள் முதல் மாறிமாறி ஆட்சிக்குவந்த சிங்கள அரசியற் கட்சிகள் அல்லது கட்சிகளின கூட்டுக்கள் கடந்த 34 ஆண்டுகளாக தமிழ் தேசிய இனத்தை அழிக்கும் நோக்கத்துடன் செயல்பட்டு-

★ "10 லட்சம் மலைநாட்டுத் தமிழ் மக்களின் குடியுரிமைகளையும், வாக்குரிமைகளையும் பறித்து அவர்களை நாடற்றவர்களாக்கி இந்நாட்டை விட்டு வெளியேற்றவும்

"★ தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய தாயகத்தில் திட்டமிட்டுச் சிங்கள மக்களை குடியேற்றி அவர்களின் பூமியை பறிக்கவும்

★ "தமிழ்மொழியின் உரிமைகளை பறித்து சிங்களத்தை தனிஆட்சிமொழியாக்கவும்

★ பௌத்த மதத்திற்கு முதலிடம் கொடுத்து ஏனைய மதத்தவர்களை இரண்டாந்தரமாக்கவும்

★ "தமிழ்பேசும்மக்களின் கல்வி, தொழில், பொருளாதார உரிமைகளையெல்லாம் பறித்து அவர்களின் வாழ்வை அழிக்கவும்

★ "காலத்திற்குக் காலம் கட்டவிழ்த்துவிடப்பட்ட இனக் கலவரங்கள்மூலம் தமிழ் பேசு மக்களின் திட்டமிட்ட இனக்கொலைக்கு வழிவகுக்கவும்

★ "அவசர காலச்சட்டத்தின் கீழும் பயங்கரவாத தடைச்சட்டம் என்ற அடக்குமுறைச்சட்டத்தினாலும்கடந்த 10 ஆண்டுகளாக தமிழ் இளைஞர்களை சட்டவிரோதமாக பல ஆண்டுகள் அடைத்தும் அடிப்படை மனித உரிமைக்கு மாறான விசாரணையின்பின் பயங்கரமான மரண தண்டனை உட்பட அநியாய தண்டனைகளை விதித்தும் தமிழ் தேசிய இனத்தை ஒழித்துக்கட்டச் செயற்பட்டுவந்த காரணத்தினால் தமிழ் தேசிய இனம், தான் இழந்த இறைமையை மீண்டும் நிலைநாட்டி சுதந்திர மதசார்பற்ற சமதர்ம தமிழ்ஈழத்தை மீட்டு எடுக்க தீர்மானித்தது. அந்த உரிமையை இந்த அரசியற் கட்சிகள் எதுவும் ஏற்றுக் கொள்ளாத சூழ்நிலையில் தமிழ்தேசிய இனம் தமிழ் ஈழ சுதந்திரமென்ற தமது கொள்கையின் அடிப்படையில் இலங்கைக்கு ஒரு ஜனாதிபதியை தெரிவுசெய்யும் தேர்தலில் பங்குபற்றுவதில்லை என்றும் வாக்களிப்பது இல்லை என்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி பொதுச்சபை தீர்மானிக்கின்றது" (மா)

## ரூ.42,000 கள்ள...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அமுனுல்லா என்பவர் குளியாப்பிட்டியிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை இரவு காத்தான்குடிக்கு வந்து காசிம் என்ற தரகர் மூலம் அரிசிஆலை உரிமையாளரிடம் 45,'00ரூபாவைச் செலுத்தி 145 மூடை அரிசியைக் கொள்வனவு செய்துள்ளார். இந்த அரிசி மூடையைக் கொண்டுசென்ற லொறியில் ஜெயக்கொடி ஸ்ரோர்ஸ். யக்கலை, குளியாப்பிட்டி என்ற விலாசமிருந்ததென்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

அரிசி ஆலை உரிமையாளர் சனிக்கிழமையன்று தமது நண்பரிடம் இதில் 16,000ரூபாவைக் கொடுத்தார் இவை முழுக்க புத்தம்புதிய நோட்டுக்களாகும். இதனால் அரிசிஆலைஉரிமையாளரின் நண்பர் சந்தேகமடைந்தார். இந் நோட்டுக்களைப் பரிசோதித்த போது அதில் பெரும்தொகை கள்ளநோட்டுக்கள் இருக்கக் காணப்பட்டன

இதனைத் தொடர்ந்து அரிசி ஆலை உரிமையாளர் இது தொடர்பாக மட்டக்களப்பு பொலிசிற்கு முறைப்பாடுசெய்தார்.

இதனையடுத்து விசாரணையிலீடுபட்ட மட்டக்களப்பு பொலிசார் முழுநோட்டுக்களிலும் 3,300 ரூபா அசல் நோட்டுக்களும், மீதி 42,(00 ரூபாவும் கள்ளநோட்டுக்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

மட்டக்களப்பு குற்றப்பிரிவ பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. ரி.ஜெயக்குமார் தலைமையிலான கோஷ்டி சந்தேகநபரைத் தேடி குளியாப்பிட்டிக்கு விரைந்துள்ளது.

மட்டக்களப்பு பொலிஸ் சார்ஜன்ட் எஸ்.ரவீந்திரராசா, கான்ஸ்டபிள் கே. சிவலிங்கம் ஆகியோர் விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இதுதொடர்பான விசாரணைகளை மேற்கொள்ள கொழும்பிலிருந்து விசேட இரகசியப் பொலிசார் வரவிருப்பதாக மட்டக்களப்பு பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி ஏ.சர்வானந்தா தெரிவித்தார். வெ)

## பகீரதனுக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திய கிரிக்கெட் டெஸ்ட்டைப் பார்ப்பதற்குச் சென்றவர்களை கடந்த வெள்ளிக்கிழமை தடுத்த இலங்கை எதிர்ச்சட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் மகன் பகீரதனையும் மற்றும் ஐத்து இளைஞர்களையும் பத்துநாட்களுக்கு றிமாண்டில் வைக்குமாறு சென்னை மேலதிக மஜிஸ்திரேட் திரு. ஏ. கணேசன் உத்தரவிட்டுள்ளார். (இ-வெ)

## தமிழீழக்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு.குமார் பொன்னம்பலம் யாழ். திறந்த வெளியரங்கக் கூட்டத்தில் தொடர்ந்து பேசுகையில்; "5 சிங்கள வேட்பாளருக்கு எதிராக தமிழீழக் கோரிக்கையை முன்வைத்து ஜனாதிபதி தேர்தலில்குதித்துள்ளேன். எமது முடிவை அகில உலகமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது" என்றார்.

"தமிழ் மக்கள் எமது தமிழீழக் கோரிக்கையை ஏற்று இத்தேர்தலைப் பகிஷ்கரிக்காது வாக்களிக்கவேண்டும்" என்றும் அவர் கோரிக்கைவிடுத்தார். (மா)

## கிரிக்கெட்டெஸ்ட்:
## இந்தியா 398-1
## கவாஸ்கர் 155!

இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையே சென்னையிலுள்ள சிதம்பரம் சேப்பாக்கம் மைதானத்தில் நடைபெற்றுவரும் முதலாவது கிரிக்கெட் டெஸ்ட்டின் மூன்றுவது நாளான நேற்று இந்தியக் கோஷ்டி முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கட்டுகளை இழந்து 398 ஓட்டங்களைப் பெற்றது. இதில சுனில் கவாஸ்கர் 155 ஓட்டங்களைப்பெற்றார்.

இலங்கைக்கோஷ்டி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கட்டுகளையும் இழந்து 346 ஓட்டங்களைபெற்றது தெரிந்ததே.

இன்று ஓய்வு நாளாகும். ஆட்டம் மீண்டும் நாளை ஆரம்பமாகும்.

## 3ம் கட்டப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆலைப்பகுதியிலேஇத்தீவிபத்து ஏற்பட்டது.

இப்பகுதியில் ஒட்டு வேலைகளில் தொழிலாளர்கள் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது தீப்பொறி அங்கிருந்த பஞ்சு போன்ற மூலப்பொருள் ஒன்றில் பிடித்து தீபரவத்தொடங்கியதாகவும், அருகே நிலக்கரி குவிக்கப்பட்டிருந்ததால்தீ அதிலும் பிடித்துக் கொள்ளவே ஜுவாலை வட்டெரிந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது

இரவு 10-00 மணியளவில் ஆரம்பித்த தீ ஜுவாலை அணைய இரண்டுமணி நேரம் பிடித்ததாம்.

பல லட்சரூபா நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகக் கருதப்படுகிறது. காங்கேசன்துறைப் பொலிசார் இவ்விபத்து பற்றி விசாரணை செய்துவருகின்றனர்.


## ஹோம் பிறுன்ஸ் லிமிட்
(யாழ்ப்பாணம்)

யாழ். புடவை வியாபாரிகளுக்கு ஓர் வரப்பிரசாதம்

ஹோம் பிறுன்ஸ் லிமிட், 82, கன்னாதிட்டி வீதியிலுள்ள ஹோம் பிறுன்ஸ் ஸ்தாபனத்தில் பூகொடை ஆலை புடவை வகைகள் மொத்த விற்பனைக்கு உண்டு.

I. சாயமூட்டிய பொப்பிளின்
II. வெள்ளை பொப்பிளின்

விபரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

ஹோம் பிறுன்ஸ் லிமிட்
82, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (போன்: 8310)

தலைமைக் காரியாலயம்

ஹோம் பிறுன்ஸ் லிமிட்
463, காலி வீதி, கொழும்பு-3



ஷர்மிளா என்டர்டெயின்மென்ட்ஸ்
லெட்சுமி ஜூவலர்ஸ் இணைந்து அளிக்கும்
தென்இந்திய திரைப்பட புகழ் நாட்டியமணி

## ஜெயமாலா வுடன்

மஞ்சுளா, மணிமாலா, விமலா, ராஜி
மற்றும் பலரின் நடன இசை நிகழ்ச்சி

- பரத நாட்டியம்
- குறத்தி நடனம்
- பாம்பு நடனம்
- அராபிய நடனம்
- கவர்ச்சி நடனம்

இன்னும் பலவும் மெல்லிசைப் பாடல்களும் கொண்ட
இதுவரை கண்டிராத புதுமை நிகழ்ச்சி

செப்ரெம்பர் 21, 22, 23 திகதிகளில்
மாலை 6-30 மணிக்கு
யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

டிக்கெற் கிடைக்கும் இடங்கள்:

- வீனஸ் றேடியோ வாச்வேக்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
- விமாகி, 27/3, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
- றிக்கோ சுவீற்ஸ் அன் கிறீம் கவுஸ், 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
- சிவராசா அன் கொம்பனி, பஸ் ஸ்ராண்ட், பருத்தித்துறை.
- லக்னி வாசா, 16, 2-ம் குறுக்கு வீதி, நல்லூர்.

4581


## மரண அறிவித்தல்

### முத்து செல்வத்துரை

உரும்பிராய் கிழக்கு அரசவீதி இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர் முத்து செல்வத்துரை காலமானார். இவர் ஈஸ்வரியின் அன்புக் கணவரும், சிவலோகேஸ்வரி, நித்தியானந்தேஸ்வரி, சத்தியானந்தேஸ்வரி (ஆசிரியை, உரும்பராய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், தி. இராசதுரை (இளைப்பாறிய C. C. S), க. நடராஜா பொறியியலாளர், தொலைத்தொடர்புத் திணைக்களம்), க. விமலேந்திரன் (விம்ஸ் உரிமையாளர்) ஆகியோரின் மாமனாருமாவர். அன்னாரது ஈமக்கிரியைகள் [20-09-82] இன்று திங்கட்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும். தகனக் கிரியைக்காக இளங்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உறவினர்களும், நண்பர்களும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

4588

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] 1982 செப். 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81
Eelanadu — P. O. Box49 Tlegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.